பக்கங்கள் : பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 18 சனிக்கிழமை (03.09.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :281

# ஐ.நா.அமைதிப்படையை அழைக்க ஜனாதிபதி சந்திரிகா உத்தேசம்?

## பதவியைவிட்டு விலகுவதற்குமுன் எதையாவது சாதித்துவிடத் துடிப்பு

கொழும்பு, செப்ரெம்பர் 3

அடுத்த இரண்டரை மாத காலத்துக்குள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டிய நிலையிலிருக்கும் சந்திரிகா குமாரதுங்க, அதற்கு முன்னர் சிங்களவர்கள் மத்தியில் தமது செல்வாக்கையும், பெயரையும்நிலைநிறுத்தும் வகையில் அதிரடி நடவடிக்கை எதையாவது மேற்கொள்ள எத்தனித்து வருகின்றார். அதன் ஒரு கட்டமாக இலங்கையில் யுத்தநிறுத்தத்தைக் கண்காணிப்பதற்கு ஐ.நா.அமைதிப்படையைக் கொண்டுவந்து நிறுத்தும் தீவிர முயற்சியில் அவர் ஈடுபட்டிருக்கின்றார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க இலங்கைப் பிரதமராக இருந்த போது அவருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் இடையில் கைச்சாத்தான புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைய, தற்போது இலங்கையில் யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. அந்த ஒப்பந்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட - ஸ்கண்டிநேவிய நாட்டுப் பிரதிநிதிகளைக் கொண்ட - கண்காணிப்புக் குழு இந்த யுத்தநிறுத்த ஒழுங்குகளைக் கண்காணித்து வருகின்றது.

ஆனால், அந்தக் கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளில் ஜனாதிபதி சந்திரிகா

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த மார்ச் மாதத்தில் உள்ளூராட்சித் தேர்தல்

கொழும்பு, செப்.3

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் அடுத்த வருட முற்பகுதியில் முடிவடைகிறது. இதனால், சபைகளை தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் அடுத்தவருடம் மார்ச் மாதம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தலுக்கான முன்னறிவித்தல் வர்த்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இளைஞர் வெட்டிக்கொலை!

திருகோணமலை, செப்.3

திருகோணமலை, சிறிமாபுரப் பகுதியைச் சேர்ந்த பியந்த (வயது-30) என்ற சிங்கள இளைஞர் இனந்தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார். நேற்றுக்காலையில் இந்தக் கொலை நடந்துள்ளது என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

துவரங்காடு பகுதியில் உள்ள பாடசாலை அருகில் தண்ணீர் தாங்கியின் கீழிருந்து அவ

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சூறாவளியினால் பாதிக்கப்பட்ட அமெரிக்காவுக்கு இலங்கை உதவி!

கொழும்பு, செப்.3

அமெரிக்காவில் கத்தரீனா சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசு 25 ஆயிரம் அமெரிக்க டொலர் உதவியை வழங்கியுள்ளது. அமெரிக்காவிலுள்ள இலங்கை மருத்துவர்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டுமென்றும் அரசு வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

மேற்படி நிவாரண நிதி அமெரிக்க செஞ்சிலுவைக் குழுவினூடாக உடனடியாக அனுப்பிவைக்கப்படுமென்றும் அரசாங்கம் நேற்று அறிவித்தது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் களத்தில் ஜெனரல் ஜானக பெரேராவும்?



கொழும்பு, செப்.3

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இராணுவத்தின் முன்னாள் மேஜர் ஜெனரலும் ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவருமான ஜானக பெரேராவும் போட்டியிட உள்ளார் என்று இணையத் தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. 36 நாடுகளில் உள்ள சிங்கள அமைப்புக்கள் இணைந்து ஜானக பெரேராவை வேட்பாளராக நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ஜானக பெரேராவை வேட்பாளராக நிறுத்தினால் அவருக்கு ஆதரவளிப்பது குறித்து ஜாதிக ஹெல உறுமய கவனம் செலுத்தும். இது குறித்து, வெளிநாடுகளில் உள்ள சிங்கள அமைப்புக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 8 உறுப்பினர்கள் நேற்றுமுன் (14 ஆம் பக்கம் பார்க்க)

## எழுதுமட்டுவாளில் சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி!

யாழ்ப்பாணம், செப். 3

எழுதுமட்டுவாள் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார். காவலரணில் இருந்த சகசிப்பாயின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில், மருதங்குளம் காவலர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சு.க. தனித்தே போட்டியிட வேண்டும் ஜே.வி.பியுடன் கூட்டு கூடவேகூடாது

கொழும்பு, செப்.3

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட வேண்டுமென்றும், எக்காரணத்திற்காகவும் ஜே.வி.பியுடன் இணைந்து தேர்தலுக்குச் செல்லக்கூடாதென்றும் கட்சித் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் வலியுறுத்துவதற்கு கட்சியின் மூத்த உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

நாளை மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இதனை வலியுறுத்துவதற்கு அவர்கள் தீர்மானித்துள்ளனர். சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பிரமுகரொருவர் நேற்று இதனை உறுதிப்படுத்தினார்.

ஜே.வி.பியுடன் இணைந்து ஜனாதிபதித் தேர்தல் பிரசாரப் பணிகளை மேற்கொள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பொலீஸ் அத்தியட்சகர் கொலை: அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டது சந்தேகநபரின் ஆட்சேபனையை அடுத்து

கொழும்பு, செப்.3

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சார்ள்ஸ் விஜேவர்தன கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையின் அடையாள அணிவகுப்பை எதிர்வரும் 16ஆம் திகதி நடத்துவதற்கு கொழும்பு பிரதம நீதிவான் அஜித் அனவரட்ண நேற்று உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரான வீரபாண்டியன் கோபி என்ற சந்தேகநபர் நேற்றையதினம் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

தனக்கு ஒருகை இல்லாதிருப்பதால் தம்மை அடையாள அணிவகுப்பில் எவரும் இலகு

(14 ஆம் பக்கம் பார்க்க)



பக்தர் வெள்ளத்தின் மத்தியில் ஆறுமுகப் பெருமான் தேரில் பவனி.

## நல்லூர் கந்தன் ரதோற்சவம் பக்திபூர்வமாக நடந்தேறியது

யாழ்ப்பாணம், செப்.3

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ரதோற்சவம் நேற்று பல்லாயிரக்கணக்கான அடியார்களின் அரோகரா கோஷத்தின் மத்தியில் மிகவும் பக்திபூர்வமாக நடந்தேறியது. குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் வன்னி மற்றும் தென்னிலங்கையில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இம்முறை படையெடுத்து வந்து தேரில் எழுந்தருளிய கந்தனைத் தரிசித்தனர். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்களும் நேற்றைய தேர்த் திருவிழாவில் பங்கேற்றனர்.

காவடிகள், கரகம், மேளதாளம், தேவாரப் பாராயணம் என்று ஆலயச்சூழல் எங்கும் பக்திமயமாகக் காட்சியளித்தது. காலை 6.30 மணியளவில் வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று 7 மணிக்கு வள்ளி தெய்வயானை சமேதராய் ஆறுமுகப்பெருமான் தேரில் எழுந்தருளி ஆரோகணித்து அடியார்களுக்கு அருள் பாலித்தார். நூற்றுக்கணக்கானவர்கள் பறவைக் காவடி, கொடிக்காவடி எடுத்தும் கற்பூரச் சட்டி ஏந்தியும், ஆயிரக்கணக்கானோர் அங்கப்பிரதிஷ்டை செய்தும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# கல்வி அமைச்சு வழங்கும் நியமனம்: திருமலையில் இறுதிக் கட்டப் பணிகள்

## கல்விச் செயலர் உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.3

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான இறுதிக்கட்டப் பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன என மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கான நியமனம் குறித்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பட்டதாரிகளுக்கு பாடசாலைகளில் நியமனம் வழங்குவது தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை, நேர்முகப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம், திட்டமிடல் உதவியாளர் நியமனம், நிதி உதவியாளர் நியமனம் என்பன வழங்கப்படவுள்ளன.

இவை தொடர்பான இறுதிக்கட்டப்பணிகள் தற்பொழுது முழு வீச்சில் இடம்பெற்றுவருகின்றன. பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது தொடர்பான சம்பிரதாயபூர்வ நிகழ்ச்சி எதிர்வரும் 7 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாணம் சார்பில் 75 பட்டதாரிகளுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளன. மேற்படி 75 பட்டதாரிகளின் பெயர் விவரங்களை மத்திய கலவி அமைச்சின் வேண்டுகோளுக்கு இணங்க நாம் போட்டிப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் தெரிவு செய்து அனுப்பிவைத்துள்ளோம்.

ஏனைய பட்டதாரிகளுக்கும் அன்றைய தினம் நியமனம் கிடைக்கக் கூடியதாக நியமனங்களை வழங்க மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் - என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## நல்லூர் தேர்த் திருவிழாவில் 63 பவுண் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம்,செப்.3

நேற்று இடம்பெற்ற நல்லூர் முருகன் ஆலயத் தேர்த் திருவிழாவின் போது மட்டும் சுமார் 63 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று உற்சவகால விசேட செயலணியிடம் முறையிடப்பட்டுள்ளது.

நல்லூர் நாயன்மார் வீதியைச் சேர்ந்த நவராசா-பாக்கியம் என்பவரின் 6 பவுண் தாலிக்கொடி, இணுவிலைச் சேர்ந்த கனகசாமி - கண்மணியின் 5 பவுண் சங்கிலி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த பரமானந்தம் - சரஸ்வதிதேவியின் 5 பவுண் தாலிக்கொடி -

ஆனைக்கோட்டை கொக்குவில் வீதியைச் சேர்ந்த பரஞ்சோதி - அன்னம்மாவின் 3 பவுண் சங்கிலி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த செல்வி மோகனதாஸ் சோபியாவின் ஒன்றேகால் பவுண் கைச்சங்கிலி -

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த அஞ்சலி பிராசிஸ் - ஆசப்பிள்ளையின் ஐந்தரைப் பவுண் சங்கிலி, திருகோணமலையைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சரஸ்வதியின் 9 பவுண் தாலிக்கொடி -

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த ஸ்ரீகஜலக்ஷனின் ஒன்றரைப்பவுண் சங்கிலி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த தயானந்தன் - ஜெகதீஸ்வரியின் அரைப் பவுண் சங்கிலி, நாயன்மார் கட்டைச் சேர்ந்த தம்பிராசா - ராசபூபதியின் 5 பவுண் சங்கிலி -

மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் - பிரேமாவதியின் இரண்டரைப் பவுண் சங்கிலி, நாவற்குழி, தச்சன்தோப்பைச் சேர்ந்த சிவகுரு- குணபதியின் ஒன்றரைப் பவுண் சங்கிலி, கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம்-பரமானந்தம் என்பவரின் 9 பவுண் தாலிக்கொடி -

சற்குணராசா-மோகனறஞ்சினியின் ஒன்றரைப் பவுண் நெக்லஸும் அரைப்பவுண் மோதிரமும், நல்லூரைச் சேர்ந்த இ.யோகநாதனின் ஒன்றரைப்பவுண் சங்கிலி என்பனவே திருடப்பட்டுள்ளன என்று விசேட செயலணியிடம் முறையிடப்பட்டுள்ளது.

இவை தவிர பணம், மணிக்கூடு போன்ற பெறுமதிமிக்க ஏனைய பொருள்களும் திருடப்பட்டுள்ளன என்றும் பலரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (9-86-ரி)

## சனநெரிசலில் சிக்குண்டு மூர்ச்சித்த பெண்மணி

யாழ்ப்பாணம்,செப்.3

நல்லூர் தேர் உற்சவத்தில் கூடிய பக்தர்களின் நெரிசலில் அகப்பட்ட பெண் ஒருவர் மயக்கமடைந்து மூர்ச்சித்தார்.

யாழ்ப்பாணம் மணல் வீதிப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சரஸ்வதி (வயது-47) என்ற பெண்ணே மயக்கமடைந்தவராவார்.

மயக்கமடைந்தவரை ஆலயத்தில் தொண்டர் சேவையில் ஈடுபட்டிருந்த செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் தமது அம்புலன்ஸ் வண்டியிலேற்றி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். (எ-15)

## சட்டவிரோதமாக மணல்ஏற்றிய டிராக்டர் தீக்கிரை

தென்மராட்சி,செப்.3

சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றதாகக் கூறப்படும் டிராக்டர் இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு கைதடி நவீல்ட் பாடசாலை அருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாவற்குழிப் பகுதியில் மணல் ஏற்றிவந்தபோது வழிமறித்த கோஷ்டியினர் டிராக்டரைப் பெட்டியுடன் தீயிட்டு எரித்ததாகக் கூறப்படுகிறது. (எ-117)

## மீனவரை கடற்படையினர் தாக்கியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,செப்.3

பொலிகண்டி கடற்பகுதியில் நேற்றுக்காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இருவரை கடற்படையினர் மோசமாகத் தாக்கியுள்ளனர்.

மீனவர்கள் சென்ற படகும் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது என்று யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

பொலிகண்டி கிழக்கிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற ஜேசுதாஸன் இருதயராசா (வயது 26), அருட்பிரகாசம் அன்ரன் (வயது 28) ஆகிய இருவருமே கடற்படையினரால் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட இருவரும் பலாலியைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள். இவர்கள் இருவரும் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மீனவர்கள் சென்ற ஏ.டீ. 180 கியுமெடிக்கா என்ற படகை கடற்படையினர் உடைத்துச் சேதமாக்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படகு நலிவடைந்த மீனவர்களுக்காக கியூமெடிக்கா நிறுவனத்தால் அண்மையில் வழங்கப்பட்டிருந்தது.

இச்சம்பவம் குறித்து உடனடியாக வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தினருக்கு முறையிட்டார். கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-9-173)

## மழைவேண்டி ஆலயங்களில் விசேட அபிசேகம்

தென்மராட்சி,செப்.3

மழைவேண்டி தென்மராட்சிப் பிரதேச இந்து ஆலயங்களில் விசேட அபிசேகம் நடத்தப்பட்டு வருகிறது.

காலபோக நெற்செய்கைக்கான ஆரம்பக் கட்ட வேலைகளை ஆரம்பிப்பதற்கு இன்னமும் மழை பெய்யாததால் நெற்செய்கையாளர்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர். (எ-117)

## தலையில் வெட்டிவிட்டு வயோதிபப் பெண்ணிடம் பகலில் நகைகள் திருட்டு!

### கோண்டாவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம்,செப்.3

பட்டப்பகலில் தனியாக வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணின் தலைப் பகுதியில் வெட்டிய திருடர், அவர் அணிந்திருந்த பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி,காப்பு ஆகிய நகைகளைக் கழற்றிக்கொண்டு தலைமறைவாயினர்.

கோண்டாவில் கிழக்குப் பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் ந.பாக்கியம்(வயது-78) என்ற வயோதிபப் பெண்ணே படுகாயமடைந்தவராவார். தேர் உற்சவத்திற்கு வீட்டிலிருந்த எல்லோரும் சென்ற வேளையே இச்சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சில மணிநேரத்தின் பின் ஆலயத்திலிருந்து திரும்பிச் சென்ற வீட்டார் படுகாயமடைந்தவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவந்து அனுமதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-15)

## வீரச்சாவடைந்த போராளிகள் விவரம்

கிளிநொச்சி,செப்.3

கடந்த காலங்களில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் வீரச்சாவடைந்த மூன்று போராளிகளின் விவரங்களை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு,நெடுஞ்சேனை எனும் இடத்தில் 16.09.1994 அன்று இலங்கை இராணுவத்தினர் உடனான நேரடி மோதலில்வீரவேங்கை வடிவேல் (தர்மலிங்கம் வடிவேல்- திருப்பழுகாமம் 01, பெரியபோரதீவு,மட்டக்களப்பு) என்பவரும்-

மட்டக்களப்பு,களுவாஞ்சிக்குடியில் 30.05.1986 அன்று விசேட அதிரடிப்படையினரால் சுடப்பட்டதில் வீரவேங்கை மோகன் (குமாரசிங்கம் குலமோகன்,கடற்கரைவீதி,களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு) என்பவரும்-


மாங்குளம் பகுதியில் 1990 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது வீரவேங்கை மதன்(அன்னத்துரை மேகநாதன் - காளிகோயில் வீதி, தேவாபுரம், முறக்கொட்டான்சேனை ,மட்டக்களப்பு) என்பவரும்-

வீரச்சாவடைந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (எ-12)

## நல்லூர் கந்தன் தேர்த் திருவிழாக் காட்சிகள்


ஆலய முன்றிலில் பக்தர் வெள்ளம்.


வடக்கு வீதியில் அசைந்து வரும் சித்திரத் தேர்.


அங்கப் பிரதிஷ்டையில் பக்தர் குழாம்


காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவேற்றும் அடியவர்.


பச்சை சாத்தி ஆறுமுகப் பெருமான் தேரில் இருந்து அவரோகணிக்கின்றார். (படங்கள்:பசீரதன்)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## அமைதித் தீர்வுக்குப் பிரதமர் வைத்திருக்கும் அணுகுமுறை என்ன?

சிறுபான்மை இனத்தவரை அடக்கி, ஒடுக்கி அவர்கள் மீது பௌத்த - சிங்கள மேலாதிக்கத்தைத் திணிக்கும் பேரினவாதிகளின் போக்குக்கு எதிராக உரிமைக் குரல் எழுப்பும் சிறுபான்மை இனத்தவர்களின் அரசியல் அமைப்புகளுள் மலையக மக்கள் முன்னணியும் ஒன்று.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அத்தகைய மேலாண்மைப் போக்குக் கட்சிகளுடன் அணிசேர துடியாய்த் துடித்துக்கொண்டிருக்கும்போது -

மலையக மக்கள் முன்னணியின் உள்ளூர்த் தலைவர்கள் இருவர் தம்பாட்டில் சென்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து, அவருக்குத் தமது முழு ஆதரவைத் தெரிவித்து, தமது அரசியல் மேதாவிசாலத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அப்போது அவர்களிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் எனக் குறிப்பிட்டு வெளியான தகவல்கள் வியப்புக்குரியவை. இலங்கை அரசியலில் அரிச்சுவடி படித்தவர்களுக்குக் கூட ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடியவை.

*''நான் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் வெளிநாட்டு அனுசரணையாளர்களின்றி விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரடியாகவே பேசுவேன்.*

*''நானும் பிரபாகரனும் இலங்கையில்தான் பிறந்தோம். இது எங்கள் பிரச்சினை. எனவே எங்களிடையேயான கலந்துரையாடல்களுக்கு வெளிநாட்டு அனுசரணையாளர்கள் தேவையில்லை. நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதும் பிரபாகரனுடன் நேரடியாகப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்.* - இப்படிப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இந்த இலங்கைத் தீவின் கடந்த ஐந்து தசாப்த கால அரசியல் வரலாறு தெரியாமல் பிரதமர் இப்படிக் கூறினாரா அல்லது தம்மைச் சந்தித்த - மலையக மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் - இருவருக்கும் இந்த அரசியல் வரலாறு தெரியாது என நினைத்து இப்படி அவர்களிடம் கதை அவிழ்த்து விட்டாரா என்பதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

மஹிந்த ராஜபக்ஷ போலவே இலங்கைத் தீவில் பிறந்தவர்களான பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, பிரேமதாஸா, சந்திரிகா குமாரதுங்க போன்ற சிங்களத் தலைவர்களுடன் வே.பிரபாகரன் போல இலங்கைத் தீவில் பிறந்த தந்தை செல்வநாயகம், அமிர்தலிங்கம் - ஏன் தலைவர் பிரபாகரன் வரை - அனைத்துத் தமிழ்த்தலைவர்களும் காலம் காலமாகத் தீர்வுக்காக நேரடியாகப் பேசியதும்-

ஆனால், அப்பேச்சுகளின்போது காலத்தை இழுத்தடித்து சிங்களத் தலைவர்களால் தமிழர்கள் ஏமாற்றப்பட்டதும் -

அதனால்தான் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தர்களாகவோ அல்லது அனுசரணையாளர்களாகவோ இந்தியா, நோர்வே போன்ற நாடுகள் இலங்கைத் தீவின் விடயத்தில் தலையீடு செய்யும் நிலைமை ஏற்பட்டதும் -

இலங்கைத் தீவின் அண்மைக்கால வரலாறாகும்.

இந்த யதார்த்த நிலையை - பட்டறிவுப் பாடத்தை - அனுபவத்தை - தமிழர் தரப்பு மறந்து விட்டு தன்னுடன் நேரடியாகப் பேச முன்வரும் என்று பிரதமர் மஹிந்த எதிர்பார்ப்பது பகற்கனவு.

அதுவும், ஒருபுறம் பேரினவாத மேலாதிக்க சக்திகளை அரவணைத்துக் கொண்டு, மறுபுறம் தமிழர் தரப்பின் தலைமையோடு நேரடியாகப் பேசித் தீர்வுகாண்பேன் என்று அவர் வாய்ச் சவடால் விடுப்பது காதில் பூச்சுற்றும் வேலையன்றி வேறில்லை.

பிரதமரை நேரில் சந்தித்து அவருக்கு ஆதரவு வெளியிட்ட மலையகத்தின் பிரமுகர்களான திகாம்பரம், அருள்சாமி போன்றவர்களிடம் இந்தப் பூச்சுற்றல் சிலசமயம் எடுபடலாம். ஆனால், ஏனைய சிறுபான்மைத் தமிழர்களிடம் இந்தக் 'கதை அளப்பு' எடுபடவே எடுபடாது.

ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் இன்று திட்டவட்டமான - தீர்க்கமான - உறுதியான - ஒரு கட்டத்தை எட்டிவிட்டது. அப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு ஒன்றைக் காண்பதாயின் அது எப்படி அமையவேண்டும் என்ற அணுகுமுறை கூட வகுக்கப்பட்டு விட்டது.

முதலில் கொடூர யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அவசர மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு போர் நெருக்கடிகளைத் தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்தல் - இதற்காக வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துதல் - தொடர்ந்து, உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறை ஒன்றைத் தமிழருக்கு வழங்குவதன் மூலம் தீர்வு காணுதல். - இதுவே இப்போது அமைதி முயற்சிகளுக்காக முன்வைக்கப்பட்டு ஓரளவு இணக்கமும் காணப்பட்டிருக்கும் தந்திரோபாய அணுகுமுறையாகும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் - பிரதமர் உட்பட முக்கிய வேட்பாளர்கள் அனைவரும் - இந்த விவகாரங்கள் தொடர்பாகத் தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாக, வெட்ட வெளிச்சமாக வெளிப்படுத்த வேண்டும்.

அதைவிடுத்து, பேரினவாதிகளுக்கு ஒரு கதையும், சிறுபான்மையினருக்கு வேறு பேச்சுமாக இரட்டைத் தோணியில் கால்வைத்து நடிப்பதும் -

நேரில் பேசித் தீர்ப்பேன் என்று வாய்ப்பந்தல் போடுவதும் - பயன்தரப் போவதில்லை.

இவ்விடயங்கள் தொடர்பாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடு என்ன? அமைதி வழியில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அவர் வைத்திருக்கும் திட்டம்தான் என்ன? அதனைத்தான் பகிரங்கப்படுத்தும்படி பிரதமரை மீண்டும் வலியுறுத்துகிறோம்.

# கொழும்பில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் தமிழ் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

### அடக்குமுறைக்கு எதிராக ஒன்றி[illegible] கொடுப்போம்

வடமராட்சி,செப்.3

ஊடகவியலாளர்களின் உயிருக்கும், பத்திரிகைச் சுதந்திரத்துக்கும் கொழும்பில் மட்டுமல்ல யாழ்ப்பாணத்திலும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இந்த அடக்குமுறைகளுக்கு எதிராக தொடர்ந்தும் நாங்கள் குரல் கொடுப்போம்.

ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து யாழ். மத்திய பஸ் நிலையமருகே நேற்றுமுன்தினம் நடைபெற்ற எதிர்ப்புப் போராட்டத்தில் பேசிய வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் எஸ். கதிர்காமத்தம்பி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் சுதந்திரமாகச் செயற்படமுடியவில்லை. தமிழ் ஊடகவியலாளர்களை சந்தேகக் கண் கொண்டு பார்க்கிறார்கள். அது மட்டுமல்லாமல் புலி முத்திரை குத்தி வருகிறார்கள். அச்சுறுத்துகிறார்கள். இவ்வாறான செயல்கள் மூலம் தமிழ் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

'சுடர்ஒளி' நிறுவனம் மூன்று தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளது. ஊழியர் ஒருவர் அநியாயமாகப் பலியாகியுள்ளார். இத்தாக்குதல் சம்பவங்களை அரசாங்கம் மூடிமறைக்கிறது. முதல் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற உடனேயே அரசாங்கம் போதிய பாதுகாப்பு வழங்கியிருந்தால் ஊழியர் ஒருவர் கொல்லப்பட்டிருக்கமாட்டார். ஆரம்பம் முதலிலேயே தாக்குதல் சம்பவங்களை அரசு மூடிமறைத்துள்ளது. இதுபோன்ற சம்பவங்களை நாம் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து பத்திரிகை ஊடக சுதந்திரத்துக்காக குரல் எழுப்புவோம் - என்றார்.

(ஓ-173)

# சோதனைக் கெடுபிடிகள் அதிகரிப்பு வடக்கே லொறிகளின் வருகை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,செப்.3

ஓமந்தையூடாக பொருள்களை ஏற்றி வரும் லொறிகளின் எண்ணிக்கை, படையினரின் சோதனைக் கெடுபிடிகளால் வெகுவாகக் குறைந்துள்ளது.

யாழ்.வணிகர் கழக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

லொறிகளின் வருகை குறைந்துள்ளதால் வர்த்தகர்கள் பாரிய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் ஓமந்தையூடாக உள்வரும் லொறிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது எனவும் -

கடந்த சில வாரங்களாக லொறிகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது எனவும்-

யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயராஜா தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் தாம் அனுப்பியுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இவ்வாறு லொறிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுவதனால் பெரும் எண்ணிக்கையான லொறிகள் தொடர்ந்து ஓமந்தைப் பகுதியில் தரித்து நிற்கின்றன.

இதனால், பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான லொறிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

- இவ்வாறு வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உரிய தரப்பினர் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

(ஐ-12-164)

# யாழ். எழுச்சி மாநாட்டு ஏற்பாட்டில் முழுமூச்சுடன் மாணவர்கள் ஈடுபாடு

கொழும்புத்துறை,செப்.3

யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கான ஏற்பாடுகளில் கிராம, பிரதேச மட்டங்களில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு குழுக்களாகக் கிராமங்கள் தோறும் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து எழுச்சிப் பிரகடனத்தின் முக்கியத்துவத்தை விளக்கி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார்கள்.

அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள் தோறும் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த ஏற்பாடுகளை மேற்கொள்ள வசதியாக சர்வதேச மாணவர் பேரவை, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவற்றில் விசேட செயலணிகள் அமைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(ஓ-30)

## உதயவாக்கு

உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனாகவும் இரு.

## நாளை

ஆவணி 19
ஞாயிற்றுக்கிழமை
04.09.2005
திதி: பிரதமை
பின்னிரவு: 2.24 வரை
நட்சத்திரம்: பூரம்
முன்னிரவு: 07.46 வரை
சுபநேரம்: 09.05 - 10.35
ராகுகாலம்: 04.35 - 06.05
(யாவும் பழைய நேரப்படி)

# தொல்பொருள் காட்சிச் சாலையில் முழுப் பயன் பெறமுடியவில்லை

### அதனைப் பார்வையிடுவோர் விசனம்

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில், நாவலர் கலாசார மண்டப வளாகத்தில் உள்ள தொல்பொருள் காட்சிச்சாலையை மாணவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர்வாசிகள் எனப் பலரும் பார்வையிட்டு வருகின்றனர். ஆனால், அவர்களால் அங்குள்ள தொல்பொருள்களைப் பார்வையிட முடிந்த போதிலும், அவை தொடர்பான விவரங்களை தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அப்பொருள்கள் குறித்த விவரங்கள் எதுவும் காட்சிப்படுத்தப்படவில்லை. பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் வடபுல வரலாற்றுச் சான்றுகள் கட்டிக்காக்கப்பட்டு வந்தன. இப்பொருள்கள் எதிர்கால, நிகழ்கால மக்களின் பார்வைக்காகவே சேகரிக்கப்பட்டுள்ளன. கடந்த காலத்தில் ஒவ்வொரு பொருள்களுக்கும் கீழ் அப்பொருள்களின் பெயர், காலவிவரங்கள், பாவனை விவரங்கள் யாவும் எழுதப்பட்டிருந்தன.

ஆனால் தற்போது இடப்பெயர்வின் பின்னர் எந்தவொரு பொருளுக்கும் எந்தவொரு விவரமும் எழுதப்படாத நிலையே காணப்படுகின்றது.

இதனால் அங்கு செல்லுவோர் எந்தவித பிரயோசனமுமற்ற நிலையில் திரும்பவேண்டியயுள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

(ஓ-15)



# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

2 ஆட்டுக்கடாக்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 20, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி. (39477)

## வீடு,காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கில் 2 பரப்பு 11 குழி காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் மாலை 6 மணிக்குப் பின்பு தொடர்புகொள்ளவும். T.P.: 0114613157. (39542)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

இளவாலை-யாழ்.788 இல் சேவையாற்றும் சிற்றூர்தியில் சாரதியினால் 25.08.2005 அன்று கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: 788, சிற்றூர்த் திச் சேவைச்சங்கம், சண்டிலிப்பாய். (39521)

## வாடகைக்கு

சமையல் அறையுடன் கூடிய அறை ஒன்று சகல வசதியுடன் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 021 222 6919, or 077 6589163, பலாலி றோட், முதலாம் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு. (39520)

## மேம்பாலம் அமைக்க கோரிக்கை

சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்பாக ஏ-9 பிரதான வீதியை பாதசாரிகள் கடந்து செல்ல வசதியாக மேம்பாலமொன்றை அமைக்குமாறு - சாவகச்சேரி நகரசபையை - வர்த்தகர்கள் கோரியுள்ளனர்.

நவீன சந்தை மேல் மாடி திருத்தம் செய்யப்பட்டதையடுத்து - மேல் மாடியில் உள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்களுடனான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை நகரசபை அலுவலகத்தில் நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலின் போது மேம்பாலம் அமைத்துதவுமாறு வர்த்தககர்களால் கோரப்பட்டது. இத்திட்டம் தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஆலோசிக்கப்படும் என்று நகர சபை சார்பில் பதிலளிக்வுகப்பட்டது

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 - 10 - 1931



மறைவு
14 - 09 - 2004

### திருமதி முருகையா கண்மணி

திதி: அமாவாசை 03-09-2005

மண்ணில் பிறந்த நாள் முதலாய் எம்மை
கண்ணின் மணியாய்க் கருதி வளர்த்தாயே!
பெண்ணின் பெரும் தகையே! பேரொடு புகழ்பெற்று நாம்
வண்ணமுற வாழ்வில் வளம்தந்த தெய்வமே!
கண்ணில் நீர் சொரியும் காலமெல்லாம் நினைக்கின்றோம்!

- குடும்பத்தினர்.

'தையல்நாயகி',
கூட்டுறவுச்சங்க ஒழுங்கை,நாவற்குழி.

(39593)(46-21-19-17)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசரத்தினம் பார்வதிப்பிள்ளை



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வாழ்விடமாகக் கொண்டவருமான இராசரத்தினம் பார்வதிப்பிள்ளை அவர்கள் 31-08-2005 அன்று லண்டனில் காலமானார். அன்னார் சின்னப்பிள்ளை சரவணமுத்து, செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் மகாராணி, ஜெயரட்ணம் ஜெயராணி, சிவகுமார், ஜெயகௌரி ஆகியோரின் தாயாரும் சிவானந்தன், ரவீந்திரன், ராஜேஸ்வரி, கண்ணகி, சாந்தகுமார் ஆகியோரின் மாமியாரும் ஷோபிகா, கிரிஷான், தயான், பிரசாந்தி, ரதன் அகர்ஜன், வைசாலி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**இ.ஜெயரட்ணம்** (மகன்),
பேக்கரிலேன், சண்டிலிப்பாய்.

(39539)(46-19-21-17)

## திருமதி நாகரத்தினம் சிவஞானம்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரெத்தினம் சிவஞானம் நேற்று (02-09-2005) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் அரவிந்த நாயகி, பேரின்பநாயகி, உதயகுமாரி (உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாண கல்வித் திணைக்களம் திருகோணமலை), ஜெயகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ஜெகதீசன் மற்றும் சிறீநவநீதகிருஸ்ணபிரசாத் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சூரியகுமாரி மற்றும் சூரியகுமார்,சந்திரகுமாரி, மதிவதனி,ரவிக்குமார், தயாளினி, வரதகுமார் ஆகியோரின் மாமியாரும் நாகலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரியும் சுகந்தி கனகசுந்தரம் (நோர்வே), புஸ்பகாந்தி கருணாகரன் (லண்டன்), சதீசன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பிரதீபன் மற்றும் மயூரன் (பிரான்ஸ்), ஜெனார்த்தனி (விவசாயத் திணைக்களம், திருகோணமலை), நிரூபா, சிற்சபேசன், காயத்திரி (பிரான்ஸ்),பிரவீன் (பிரான்ஸ்), ஆரணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் தனுசன், சரண்யா, சயானா,சாருகன், சஞ்ஜே ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று(02-03-2005) வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(39546)

3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. T.P. 021 222 7238

---

வ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் ஆவணி மாதம் 19ஆம் நாள் (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை பிரதமை திதியும், சித்தாமிர்த யோகமும், உத்தர நட்சத்திரமும் கூடிய சுபயோக சுப தினத்தன்று காலை 9.35 மணிமுதல் 11.05 மணி(பு.நே.) வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**பிரபாகரன்**
அவர்களுக்கும்



எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**பிறேமலதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக் கின்றோம்.

குறிப்பு 07.09.2005 இல் மணமகள் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

(இரு வீட்டார் அழைப்பு)

தங்கள் நல்வரவை நாடும்:

திரு. சு.சௌந்தரநாயகம்
திருமதி மனோரஞ்சிதமலர் சௌந்தரநாயகம்
6, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
தொ.இல. 021 222 2929

திரு. மு.இராஜேந்திரம்
திருமதி யோகலட்சுமி இராஜேந்திரம்
உடுத்துறை வடக்கு, தாளையடி.
தொ.இல. 077 9103432

---

நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்கத்துக்கான அமைச்சு வடக்கு-கிழக்கு மாகாண சபை
வடகிழக்கு புனர்வாழ்வு சம்பந்தமாக உலகவங்கியின் உதவியுடன் செயற்படுத்தப்படும்
வடகிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் - கட்டம் II கடன் இல.3935 C.E
தேசிய கூறுவிலை கோரல் (நிர்மாண வேலைகள்)

# கேள்வி அறிவித்தல்

01. இரண்டாவது வடக்கு-கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக சர்வ தேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கையரசு பெற்றுள்ளது. கீழுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலில் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. இதன் பின்னகத்துத் தொழில் தருநராக குறிப்பிடப்படும் நியாப் - II கருத்திட்டத்தின திட்டப் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதி வாய்ந்த கேள்வி கோருவோரிடம் இருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளை தற்போது கோருகின்றார்.
03.

| இல. | கேள்விக் குறியீடு | வேலை விவரம் | கேள்விப் பிணை ரூபா | இக்ராட் தரம் |
|---|---|---|---|---|
| 01 | J/NEIAP - II/ C3/01/2005 | பருத்தித்துறை மிருக வைத்திய அலுவலகத்தில் சத்திர சிகிச்சைப் பகுதியை அமைத்தல் | 5000.00 | M10 |
| 02 | J/NEIAP - II/ C3/02/2005 | திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு கூடத்தை நீட்டியமைத்தல் | 12000.00 | M9 |
| 03 | J/NEIAP - II/ C3/03/2005 | திருநெல்வேலி விவசாய திணைக்களத்தின் களஞ்சிய அறையை புனரமைத்தல் | 18000.00 | M8 |
| 04 | J/NEIAP - II/ C3/04/2005 | சாவகச்சேரி மிருகவைத்திய அலுவலகத்தின் மதிற்சுவர் அமைத்தலும் அலுவலகத்தை புனரமைத்தலும் | 13000.00 | M9 |
| 05 | J/NEIAP - II/ C3/05/2005 | திருநெல்வேலி செயற்கை முறை சினைப்படுத்தல் நிலையத்தைப் புனரமைத்தல் | 15000.00 | M9 |
| 06 | J/NEIAP - II/ C3/06/2005 | வேலணை மிருக வைத்தியசாலையைப் புனரமைத்தல் | 8000.00 | M9 |
| 07 | J/NEIAP - II/ C3/07/2005 | கோப்பாய் மிருக வைத்திய அலுவலகத்தில் மாநாட்டு அறை அமைத்தல் | 12000.00 | M9 |

04. மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 500.00 ஐ காசாக நியாப் அலுவலகம், கச்சேரி யாழ்ப்பாணத்தில் செலுத்தி வழமையான அலுவலக நேரத்தில் 05.09.2005 இல் இருந்து 10.09.2005 ஆம் திகதி வரை முற்பகல் 9.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்தில் ஒப்பந்த ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
05. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்த பிணை முறிகளுடன் பொறிவைத்த கேள்வியை **தலைவர், மாவட்ட கேள்விச்சபை, நியாப் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு செப்ரெம்பர் 20ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
06. இவ் ஒப்பந்த வேலைகள் சம்பந்தமான மேலதிக விளக்கங்கள் அலுவலக நேரங்களில் நியாப் அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 021-222 5068 தொலைநகல் : 021-222 5068

**க.கணேஷ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலகம், யாழ்ப்பாண மாவட்டம்.**

(C/44495)
(21.19.14)

# தீவகப் பகுதியில் நவம்பர் முதல் அம்புலன்ஸ் படகு சேவைக்கு வரும்

## 'கியூமெடிக்கா' ஏற்பாட்டில் நடைபெறும்

வலி.தென்மேற்கு,செப்.3

'கியூமெடிக்கா' நிறுவனம் தீவகப் பிரதேசத்திலுள்ள மக்களின் நலன்கருதி அம்புலன்ஸ் படகுச் சேவையை நவம்பர் முதல் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இந்த அம்புலன்ஸ் படகில் மருத்துவர் ஒருவரும் மற்றும் தாதிகளும் பணிபுரிவார்கள் என்றும் -

சுமார் 150 மில்லியன் ரூபா செலவில் கொழும்பில் இந்த அம்புலன்ஸ் படகு கட்டப்பட்டு வருவதாகவும் -

கியூமெடிக்கா நிறுவனத்தின் இலங்கை இணைப்பாளர் சாம் இராஜசூரியர் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பிக்கப் படவுள்ள இந்தச் சேவையில் அம்புலன்ஸ் படகு நெடுந்தீவில் நிறுத்திவைக்கப்பட்டு அங்கிருந்து அவசர நோயாளர்களை குறிகட்டுவான் துறைமுகத்திற்கு கொண்டு வரும் என்றும் - தீவகத்தின் ஏனைய பகுதிகளிலுள்ள அவசர நோயாளர்களும் இந்த அம்புலன்ஸ் படகில் ஏற்றிவரப்படுவார்கள் என்றும் - அவர் தெரிவித்தார்.(ஒ-135)

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு மருத்துவ நிபுணர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.3

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலும் ஒரு மருத்த்ுவ நிபுணர் நியமிக்கப்பட்டுள்ளார். வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த வைத்திய நிபுணரான டாக்டர் திருமதி சிவகாமசுந்தரி உதயகுமாரனே தனது பணியினை இவ்வார முற்பகுதியில் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற இவர், வெளிநாட்டில் மேற்படிப்பை முடித்து விட்டு நாடு திரும்பியவராவார். அதன் பின்னர் கொழும்பு தேசியவைத்திய சாலையில் சிலகாலம் பணிபுரிந்த இவர் தற்போது யாழ்.போதான வைத்தியசாலையில் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவருடன் தற்போது 7 வைத்திய நிபுணர்கள் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வருகின்றனர். (ஒ-15)

# 'வடக்குச் சிறுவர் சமூகம்' விரைவில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,செப்.3

யாழ்.மாவட்டச் சிறுவர்களை உள்வாங்கி 'வடக்குச் சிறுவர் சமூகம்' (*Nothern Children Society*) என்ற அமைப்பு உருவாக்கப் படவுள்ளது.

வடக்கில் செயற்பட்டுவரும் இருபதுக்கும் மேற்பட்ட அரசசார்பற்ற சிறுவர் நலன் பேணும் அமைப்புக்களின் பங்களிப்புடன் யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இந்த அமைப்பை உருவாக்கவுள்ளது.

சிறுவர் மேம்பாடு, ஆளுமை விருத்தி போன்றவை கருதி அமைக்கப்படவுள்ள இந்த அமைப்பில் யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் சுமார் 70 சிறுவர்கள் வரை உள்வாங்கப்படவுள்ளர். எதிர்வரும் ஒக்ரோபர் முதலாம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் இந்த அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.

இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட வேலைத்திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன என்று 'சீடா' சிறுவர் உரிமைத் திட்ட வடமாகாண பிராந்திய அலுவலர் ரி.ரி.மயூரன் தெரிவித்தார். (ஐ-9)

## நாடகப் போட்டியில் ஸ்கந்தா முதலிடம்

வலி.தெற்கு,செப்.3

அண்மையில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையில் ஆழிப்பேரலை அனர்த்தம் தொடர்பான நாடகப் போட்டியில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை கல்வி அமைச்சும், ஜனாதிபதி செயலகமும் இணைந்து இப்போட்டியை நாடளாவிய ரீதியில் நடத்தியன.


மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ள ஸ்கந்தவரோதயக் கல்லூரி அகில இலங்கை போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதிபெற்றுள்ளது.(ஒ-152)

## கவிதை, கட்டுரைப் போட்டிகள்

தென்மராட்சி,செப்.3

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சமூக நலத்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையே பிரதேச ரீதியாக கவிதை,கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் மூன்று பிரிவுகளாக இப்போட்டிகளை நடத்தி ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் மாணவரின் விவரங்களை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-117)




# சாவகச்சேரி இந்து.நூற்றாண்டு விழா

சாவகச்சேரி,செப்.3

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவின் நிறைவு நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மை விருந்தினர் யாழ்.அரச அதிபர் க.கணேஸ் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் பாடசாலை ' பாண்ட்' வாத்தியக் குழுவினர் சகிதம் அழைத்து வரப்பட்டனர்.

பின்னர் பாடசாலைக் கொடி ஏற்றப்பட்டு கல்லூரிக் கீதம் இசைக்கப்பட்டது. மங்கள விளக்கினை கல்லூரியின் முன்னாள் ஓய்வு பெற்ற அதிபர்கள் ஏற்றினர்.

தொடர்ந்து சிறப்புரைகள் இடம் பெற்றன. நூற்றாண்டு ஞாபகார்த்தமாக பாடசாலை வளாகத்தில் பாடசாலை வாயில் பகுதியில் நிறுவப்பட்ட நூற்றாண்டு நினைவுக் கல்லினை முதன்மை விருந்தினர் திரை நீக்கம் செய்து வைத்தார். அத்துடன் விழா மலரும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து நூற்றாண்டு விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன. இறுதியாகக் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

(ஒ-31)

# அளவெட்டி குடியிருப்புக் காணியில் வெடிக்காத நிலையில் 'ஷெல்' மீட்பு!

வரணி,செப்.3

அளவெட்டி மலைவேம்படிச்சந்தைக்கு அருகே உள்ள குடியிருப்புக் காணியில் வெடிக்காத நிலையில் மண்ணுள் புதைந்திருந்த 'ஷெல்' ஒன்று கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தின்போது ஏவப்பட்டதாகக் கருதப்படும் இந்த 'ஷெல்' குண்டு மண்ணினுள் வெடிக்காத நிலையில் புதைந்திருந்தது. இக்காணியில் முன்பு குடியிருந்தவர்கள் இதுபற்றித் தெரிந்திருக்கவில்லை. தற்போது வேறு ஒரு குடும்பம் இங்கு குடியிருக்கிறது. இவர்களே இது பற்றி அறிந்து 'டெனிஸ்' மிதிவெடி அகற்றும் குழுவிற்குத் தெரியப்படுத்தினர்.

அந்தக் குழுவினர் 'ஷெல்' குண்டை மீட்டு வெடிக்க வைத்தனர். (ஒ-170)

# நூல்வரிசை



நூல்:- ஜஃப்னா ஸ்கிறபிளர் (*Jaffna Scrabbler - Volume II*)

வெளியீடு:- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஸ்கிறபிள் கழகம்

ஆலோசனை ஆசிரியர்:- சி.அன்ரன் ஜெயராஜ்

ஆசிரியர்:- சி.சிவமைந்தன்

ஆங்கில மொழியின் அவசியம் பற்றி எவருக்கும் இன்று நாம் அறிவுரை கூற வேண்டிய அவசியமில்லை. அந்தளவிற்கு நாம் இன்று உலகமயமாதலிற்கு உட்பட்டு நிற்கின்றோம். நாம் உலகினையும் உலகம் எம்மையும் அறிந்து கொள்ள உதவும் ஊடக மொழியாக ஆங்கிலம் செயற்படுகின்றது.

ஒருவர் ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமாயின் முதலில் அவர் அம்மொழியைக் கற்க வேண்டிய தேவையையும், அதனைக் கற்பதால் வரும் பலாபயனையும் உணரவேண்டும். அத்துடன் அதில் ஆர்வமும் காட்டவேண்டும். ஒரு மொழியின் இலக்கணத்தை மட்டுமன்றி அம் மொழியின் நடைமுறை, சொற்பிரயோகத்திறன், சொல்லாடற்றிறன், இலக்கிய நயம் என்பனவற்றை சரியான முறையில் கையாளும் போதுதான், ''கற்றவர்'' கற்றார் என்பதற்கு எடுத்துக் காட்டாகும். மொழி ஓர் ஊடகம். சரியான முறையில் அதனைக் கையாளும் போது, உரிய பயனை அடைந்து கொள்ளலாம். குறிப்பிட்ட மொழி பயன்பாட்டில் உள்ள சூழலில் வாழும் போது, நாம் அன்றாடம் பல சொற்களைக் கேட்க, உள்வாங்க - கிரகிக்க மற்றும் பிரயோகிக்க வேண்டியவர்களாகின்றோம். எனவே, சொற்றிறன் (*Vocabulary Power*) அதிகரித்துச் செல்லும் எனவே, அம்மொழியில் நாம் பேச விளையும் போது ''சொற்தட்டுப்பாடு'' உருவாக மாட்டாது. எனவே, ''சொற்றிறன்'' இங்கு முக்கியமாகின்றது.

ஆங்கில மொழியில் சொற்றிறனை வளர்க்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி *Scrabble* என்ற கல்விசார் உள்ளக விளையாட்டினைத் தனது மாணவர்களிடையே 2003இல் அறிமுகம் செய்தது.

இதன் மூலம் பெற்றுக்கொண்ட நற்பலாபலன்களைத் தம்மைப் போன்று யாழ். மாவட்டத்தின் ஏனைய மாணவர்களும் பெற்றுப்பயனடையும் நோக்கில் தனது செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றது. இந்த வகையில் சொற்றிறனை மையமாக வைத்து - அதனை வளர்க்கும் நோக்கில் *Jaffna Scrabbler* என்ற ஈராண்டு சஞ்சிகையின் இரண்டாவது பாகம் வெளியிடப்பட்டுள்ளது. *Scrabble* என்ற விளை யாட்டில் இலங்கையைப் பொறுத்தவரைக்கும் ஓரிரு நூல்கள்தான் மிக அண்மை யில் வெளியாகியுள்ள வேளையிலும், இலங்கையில் இத்துறையில் முதன் முதலில் வெளிவந்த நூல் சஞ்சிகை என்ற பெருமையை *Jaffna Scrabbler* பெற்றுள்ளது. உள்ளத்தைக் கவரும் வர்ணமுகப்பு - உள்ளத்தைத்தொடும் பல கருத்துக்களைக் கூறி நிற்க, உள்ளே தமது அனுபவரீதியாக உணர்ந்த தேவைகளை நிறைவாக்கும் வண்ணம், தமது அனுபவம் -அறிவு என்பவற்றுடன் மிகவும் திட்டமிட்டு உரிய முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாக இந்நூல் விளங்குகின்றது. யாழ்.மாவட்டத்தின் மாணவர்களுக்கும். *Scrabble* விளையாட்டில் சிறந்து விளங்க அல்லது அதனை அறிந்து கொள்ள ஆவலுள்ளவர்களுக்கும், முழுமையில் ஆங்கில மொழி ஆர்வலர்களுக்கும் இந்நூல் வரப்பிரசாதமாக உள்ளது.

**வே.கருணாநிதி**
'சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை,
உயர்தொழில்நுட்ப கல்விநிறுவகம்'

# மக்கள் முகம்



வலி.தெற்கு,செப்.3

காந்திய சிந்தனைகள் பற்றிய கற்கை நெறியில் சித்தியடைந்து கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் க.செல்வக்குமாரன் முதுமாணிப்பட் டம் பெற்றுள்ளார்.

இலங்கையில் காந்திய கற்கைநெறியில் முதலாவது முதுமாணிப் பட்டத்தை இவர் பெற்றுள்ளார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தினரால் அண்மையில் நடத்தப்பட்ட காந்திய கற்கைநெறி பரீட்சையில் முதல்தர சித்தியைப் பெற்று முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

விவசாயபாட பயிற்சி ஆசிரியராக இணைந்துகொண்ட க.செல்வகுமாரன் கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் கடந்த 14 ஆண்டுகளாக இலங்கை அதிபர் சேவை முதலாம் தர அதிபராகக் கடமையாற்றிவருகிறார்.

க.செல்வகுமாரன் அவர்கள் இலங்கை காந்திய சேவை சங்கத்தின் நீண்டகால உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-152)

# மக்கள் சேவையில்

வலி.தென்மேற்கு,செப்.3

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய வ.ஸ்ரீகாந்தன் பதவியேற்றுள்ளார்.

திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளரினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (3-135)

* * *

வலி.தென்மேற்கு,செப்.3

இளவாலை பொது சுகாதாரப் பரிசோதகர் சி.கருணாநிதி இம்மாதம் முதல் சுழிபுரம் பொது சுகாதாரப் பரிசோதகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தன் இளவாலை பொது சுகாதாரப் பரிசோகராகப் பதில் கடமையாற்றி வருகின்றார். (3-135)



ஏழாலை மேற்கு சைவ சண்மார்க்க வித்தியாசாலையில் மக்கள் வங்கியின் சுன்னாகம் கிளையினரால் மாணவர் மலர்ச்சித் திட்ட அலகு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான நிகழ்வில் 10 ஆயிரம் ரூபா வைப்பிலிட்ட மாணவிக்கு சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. சந்திரகாந்தன் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (204)

# தமிழீழ மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு - 2005

தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளளிப்புக்கு தெல்லிப்பழை உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப்படையில் தெரிவானோரில் எஞ்சியோரின் பெயர்களும் குலுக்கல் அடிப்படையில் தெரிவானோரின் பெயர்களும் மற்றும் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் மூப்பின் அடிப் படையில் தெரிவானோரில் ஒரு பகுதியினரின் பெயர் களும் இங்கு வெளியிடப்படுகின்றன.

தெ/ 4121 திரு. சின்னையா இரத்தினம்
தெ/ 4129 திருமதி. அன்னலட்சுமி கனகசபை
தெ/ 4144 திருமதி. சிரோன்மணி மகாதேவா
தெ/ 4150 திருமதி. சவிரி கபிரியேல்
தெ/ 4157 திருமதி. மாரியம்மா சமிநாதர்
தெ/ 4164 திரு. முருகேசு முத்துலிங்கம்
தெ/ 4166 திரு. முருகன் செல்லையா
தெ/ 4167 திருமதி. இலட்சுமி சின்னத்தம்பி
தெ/ 4198 திருமதி. கனகம்மா கந்தையா
தெ/ 4199 திரு. கந்தவனம் இலங்கநாயகம்
தெ/ 4208 திரு. சின்னத்தம்பி குமாரசாமி
தெ/ 4225 திரு. கந்தையா சிதம்பரநாதன்
தெ/ 4230 திரு. ஆசைப்பிள்ளை கதிரவேலு
தெ/ 4238 திருமதி. தங்கம்மா முருகையா
ந/ 4241 திருமதி. சிவனேஸ்வரி பொன்னம்பலம்
தெ/ 4256 திருமதி. மீனாட்சி கந்தையா
தெ/ 4274 திரு. தியாகநாதஐயர் செந்தில்நாதஐயர்
தெ/ 4289 திருமதி. பொன்னம்மா முருகுப்பிள்ளை
தெ/ 4298 திரு. தம்பிமுத்து கந்தவனம்
தெ/ 4304 திரு. கந்தையா செல்லத்துரை
தெ/ 4308 திருமதி. கமலநாயகி சுப்பிரமணியம்
தெ/ 4328 திருமதி. விஜயலட்சுமி விக்னராசா
தெ/ 4335 திரு. மயிலு கதிரவேலு
தெ/ 4338 திரு. சின்னக்குட்டி வைரமுத்து
தெ/ 4340 திரு. பரராஜசேகரம் சிறீதரன்
தெ/ 4348 திரு. சவரிமுத்து அமிர்தநாயகம்
தெ/ 4385 திரு. நாகன் நாகமுத்து
தெ/ 4388 திரு. இளையதம்பி சுப்பிரமணியம்
தெ/ 4392 திருமதி. பூரணம் தருமலிங்கம்
தெ/ 4399 திரு. சுப்பிரமணியம் கந்தையா
தெ/ 4404 திருமதி. நாகம்மா பொன்னர்
தெ/ 4406 திரு. தம்பு நாகராசா
தெ/ 4412 திரு. வேலுப்பிள்ளை செல்லக்குட்டி
தெ/ 4421 திரு. முருகேசு நாகலிங்கம்
தெ/ 4426 திரு. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்
தெ/ 4428 திரு. சுப்பையா தர்மராஜா
தெ/ 4437 திருமதி. பொன்னம்மா முருகுப்பிள்ளை
தெ/ 4446 திரு. சரவணை சின்னத்துரை
தெ/ 4456 திரு. மத்தேசு தேவசகாயம்
தெ/ 4468 திருமதி. தங்காள் சந்திரசேகரம்
தெ/ 4489 திரு. முத்தன் சிதம்பரநாதன்
தெ/ 4490 திருமதி. செபமாலையம்மா சின்னப்பு
தெ/ 4497 திருமதி. சரஸ்வதி வைத்திலிங்கம்
தெ/ 4511 திருமதி. மங்கையற்கரசி பொன்னுத்துரை
தெ/ 4522 திரு. சுப்பர் சுப்பிரமணியம்
தெ/ 4523 திரு. இளையதம்பி இராசையா
தெ/ 4526 திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
தெ/ 4528 திரு. பத்திரனேக சீமன்சிங்கோ
தெ/ 4531 திரு. இறப்பியேல் யோசேப்
தெ/ 4532 திரு. தவசிப்பிள்ளை வேலுப்பிள்ளை
தெ/ 4536 திரு. பொன்னர் முருகையா
தெ/ 4538 திருமதி. செபமாலைஅம்மா சின்னப்பு
தெ/ 4542 திரு. வன்னியன் வேலன்
தெ/ 4544 திருமதி. திருப்பதி வைரமுத்து
தெ/ 4550 திருமதி. தங்கம் ஆறுமுகம்
தெ/ 4558 திருமதி. திரவியம் சதாசிவம்
தெ/ 4569 திரு. கனகசபை கனகரட்ணம்
தெ/ 4581 திருமதி. இராசம்மா நாகலிங்கம்
தெ/ 4588 திரு. இரகுநாதர் குமாரசாமி
தெ/ 4591 திரு. நரசிங்கம் சுப்பிரமணியம்
தெ/ 4608 திரு. சின்னையா சின்னத்துரை
தெ/ 4618 திருமதி. பொன்னுப்பிள்ளை விசுவலிங்கம்
தெ/ 4632 திருமதி. இராஜேஸ்வரி கனகநாயகம்
தெ/ 4636 திருமதி. பரமேஸ்வரி இராமநாதர்
தெ/ 4644 திரு. மூத்தார் சின்னத்துரை
தெ/ 4659 திரு. சண்முகம் கந்தசாமி
தெ/ 4660 திரு. கணபதிப்பிள்ளை பாலசிங்கம்
தெ/ 4661 திரு. கணபதிப்பிள்ளை செல்லத்துரை
தெ/ 4665 திரு. முருகர் சின்னத்துரை
தெ/ 4667 திருமதி. சிவபாக்கியம் செல்லத்துரை
தெ/ 4676 திரு. இளையகுட்டி நரசிங்கம்
தெ/ 4681 திருமதி. சரஸ்வதி சுப்பிரமணியம்
தெ/ 4683 திருமதி. கனகாம்பிகை கனகரட்ணம்
தெ/ 4687 திரு. பொன்னர் சுந்தரம்
தெ/ 4688 திரு. பொன்னம்பலம் சரவணபவன்
தெ/ 4696 திரு. பசுபதி தளையசிங்கம்
தெ/ 4701 திரு. வைத்தி சின்னத்துரை
தெ/ 4706 திரு. மாரிமுத்து சின்னத்தம்பி
தெ/ 4707 திருமதி. தங்கம்மா செல்லையா
தெ/ 4710 திரு. சின்னவன் சபாபதி
தெ/ 4716 திருமதி. நாகேஸ்வரி முருகேசப்பிள்ளை
தெ/ 4722 திருமதி. அன்னப்பிள்ளை சபாபதி
தெ/ 4728 திருமதி. கனகம்மா வடிவேலு
தெ/ 4735 திருமதி. பங்கையற் செல்வி தியாகராஜா
தெ/ 4739 திரு. சிதம்பரி கந்தையா
தெ/ 4740 திருமதி. அன்னம்மா சிவலிங்கம்
தெ/ 4757 திருமதி. இரத்தினம் சின்னப்பு
தெ/ 4760 திரு. செல்லப்பா குணம்
தெ/ 4780 திரு. கந்தையா சுப்பிரமணியம்
தெ/ 4785 திரு. கந்தையா திருச்சிற்றம்புலம்
தெ/ 4795 திரு. முருகேசு மார்க்கண்டு
தெ/ 4797 திரு. நன்னியர் முருகன்
தெ/ 4803 திரு. வன்னித்தம்பி காசிப்பிள்ளை
தெ/ 4806 திரு. இலகுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
தெ/ 4811 திருமதி. இளையபிள்ளை முத்துக்குமாரு
தெ/ 4818 திருமதி. தெய்வேந்திரமணி மயில்வாகனம்
தெ/ 4819 திருமதி. மகேஸ்வரி கதிர்காமநாதன்
தெ/ 4820 திரு. [illegible]தம்பி நல்லையா
தெ/ 4825 திருமதி. [illegible]ங்கம் பிள்ளைநாயகம்
தெ/ 4832 திரு. கந்தப்பிள்ளை சின்னத்துரை
தெ/ 4835 திருமதி. மகேஸ்வரி சின்னத்தம்பி
தெ/ 4851 திரு. சின்னத்தம்பி திருநாவுக்கரசு
தெ/ 4869 திரு. விஸ்வலிங்கம் சற்குணம்
தெ/ 4875 திருமதி. அன்னலஷ்சுமி சிங்கராசா
தெ/ 4880 திரு. ஆறுப்பிள்ளை கந்தசாமி
தெ/ 4885 திரு. வல்லி கந்தையா
தெ/ 4890 திருமதி. அருமை கதிரவேலு
தெ/ 4902 திரு. முருகன் மாணிக்கம்
தெ/ 4907 திரு. சம்பந்தர் கந்தையா
தெ/ 4910 திரு. கந்தையா பரமேஸ்வரன்
தெ/ 4922 திருமதி. நாகம்மா கந்தன்
தெ/ 4942 திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பி
தெ/ 4946 திரு. வயித்திலிங்கம் மதியாபரணம்
தெ/ 4951 திருமதி. பூபதி சிவலிங்கம்
தெ/ 4961 திருமதி. பரமேஸ்வரி ஐயம்பிள்ளை
தெ/ 4965 திருமதி. எலிசபெத் மிக்கேர்
தெ/ 4968 திருமதி. அன்னம்மா நாராயணபிள்ளை
தெ/ 4972 திருமதி. இராசாம்பாள் துரைசிங்கம்
தெ/ 4973 திரு. ஆறுமுகம் முத்தையா
தெ/ 4978 திரு. தம்பாபிள்ளை சண்முகநாதன்
தெ/ 4981 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை
தெ/ 4993 திரு. சுப்பையா தம்பிராசா
- In close collaboration with local authorities, conduct emergency operations assessment when needed and provide adequate recommendations.
- Assist ECOSEC delegate in designing and implementation of community based programs and livelihood support projects for the most poor people.
- Assist ECOSEC delegate in the assessment of management skills of community and initiate with District Departments training when required.
- In close collaboration with local authorities and other NGOs, contribute to the sensitization of target communities in order to help them to make better choices and determine priorities, mobilize resources, request financing and implement and manage livelihood support programs.

**Employment Conditions:**
According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs (incl.photocopy of experience certificates) to ICRC's office in Kilinochchi until **Friday, 09th of September 2005**. Qualified candidates will be contacted for interviews.

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi,
Iranaimadu Junction,
Kilinochchi.
Phone: 071 237 5697.



Jayoda **ஜயோதா** ජයෝදා

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7181769 முதல் 7193863 வரை சீட்டிழுப்பு இல. 164 திகதி 01-9-2005

வெற்றி எண்கள் **8 8 8 5 6 7** சுப்பர் எண் **25**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,36,08,400/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,36,08,400/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 104 | 5,000/- | 5,20,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,035 | 500/- | 5,17,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,402 | 50/- | 5,20,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,03,020 | 10/- | 10,30,200/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 108 | 1,000/- | 1,08,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,031 | 100/- | 1,03,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,310 | 20/- | 2,06,200/- |
| | | மொத்தம் | 4,550,100/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 5,152,700/- |

இந்த திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,38,97,450/-**

தொடர் இல. 6253268 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 செப்டம்பர் 05 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| குருநாகல் | 7188124-8-86 |
| மொனராகலை | 7188943-1-81 |
| பொலன்னறுவை | 7183125-8-53 |
| ஹம்பாந்தோட்டை | 7185237-6-51 |
| கொழும்பு | 7193687-2-68 |
| அனுராதபுரம் | 7190388-0-72 |
| திருகோணமலை | 7190510-5-70 |
| காலி | 7192616-7-25 |

# நீதிமன்றம் அழைத்துவரப்பட்ட கைதி சக கைதியினால் சுட்டுக்கொலை!

கொழும்பு, செப்.3

வழக்கு விசாரணை ஒன்றிற்காக நேற்றுமுன்தினம் கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்ட சிறைக் கைதி ஒருவர் மற்றுமொரு கைதியினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பகல் 11.40 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் முஹம் மட்றிலா முஹம்மட் றிஸ்வான் என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வழக்கு விசாரணை ஒன்றிற்காக வெலிக்கடை சிறைச்சாலையிலிருந்து இவர் அழைத்து வரப்பட்டவேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. அவருடன் சிறைச்சாலை பஸ்ஸில் பயணித்த மற்றுமொரு கைதி திடீரென பிஸ்ரல் ஒன்றினால் இவர் மீது 6 தடவை துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளார்.

சிறைச்சாலை வாகனம் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்ட சில நிமிடங்களில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய கைதி விலங்கிடப்பட்ட நிலையிலேயே நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தார். துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு வசதியாக அவரது கைவிலங்கை அகற்றுவதற்குச் சிறைக்காவலர் ஒருவர் ஒத்தாசை புரிந்திருக்கிறார் என்பது ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திய குறிப்பிட்ட கைதி, பின்னர் தப்பியோட முயன்றுள்ளார். நீதிமன்ற வளாகத்திலிருந்த பொலீஸாரும், இராணுவத்தினரும் அவரை மடக்கிப்பிடித்தனர்.

'பிரின்ஸ் கொலம்' என்ற பாதாள உலகக் கோஷ்டியின் முக்கியஸ்தரான கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த அரவிந்த பெரேரா அல்லது தனுஷ்ன என்பவரே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த ரிஸ்வான் உடனடியாகத் தேசிய வைத்தியசாலையின் அவசர விடத்துப் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவரைக் காப்பாற்ற முடியாமற் போனது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்த கொழும்பு மேலதிக நீதிவான் அஜித் அனவரட்ன சம்பவம் குறித்த விசாரணைகளை மேற்கொண்டார். மரண விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு அவர் பொலீஸாரைப் பணித்தார்.

சந்தேக நபரின் கைகளிற்குத் துப்பாக்கி எப்படிக் கிடைத்தது என்று விசாரிக்கும்படி சிறைச்சாலை ஆணையாளருக்கும் அவர் பணிப்புரை விடுத்தார். (க)

# கதிர்காமரைக் கௌரவிக்கும் வகையில் அவருக்கு சிலைவைக்க அரசு முடிவு

## புலிகள்தான் அவரைக் கொன்றனர் எனவும் அறிவிப்பு

கொழும்பு, செப்.3

வெளிவிவகார முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை விடுதலைப் புலிகள்தான் கொலை செய்தார்கள் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன என நேற்றுமுன்தினம் அரசு அறிவித்திருக்கிறது.

அமைச்சர் கதிர்காமர் நாட்டுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக்கும் வகையில் அவருக்குச் சிலையொன்றை அமைக்கவும் அரசு தீர்மானித்திருக்கிறது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற போது சுகாதார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான நிமால் சிறிபால டி சில்வா மேற்படி தகவல்களை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது-

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்கா மர் கொலை விசாரணையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்படி, விடுதலைப் புலிகள்தான் இந்தக் கொலையின் சூத்திரதாரிகள் என்பது சந்தேகத்திற்கிடமின்றி உறுதியாகியிருக்கிறது.

அமைச்சர் கதிர்காமர் நாட்டுக்கு ஆற்றிய சேவையைக் கௌரவிக் கும் வகையில் அவரின் சிலை யொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. இந்தச் சிலையை எங்கே நிறுவுவது என்பதைத் தீர்மானிப்பதற்கும் சிலை நிறுவுவது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் என மூன்று அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்களான மங்கள சமரவீர, பேரியல் அஷ்ரப், தினேஷ் குணவர்தன ஆகியோர் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

அதேபோல், வெளிவிவகார அமைச்சின் கீழுள்ள சர்வதேச கற்கைகள் நிலையத்தை லக்ஷ்மன் கதிர்காமர் கற்கை நிலையமாக மாற்றுவதற்கும் அமைச்சரவை தீர்மானித்துள்ளது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்த இரண்டு யோசனைகளையும் அமைச்சரவையில் முன்வைத்தார்.

- இவ்வாறு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் பாதுகாப்பு தீவிரம்!

ஏறாவூர், செப். 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வரும் தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்களையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகரம், வாழைச்சேனை, செங்கலடி, ஏறாவூர் ஆகிய பிரதேசங்களில் மேலதிக இராணுவத்தினரும் பொலீஸாரும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

...க்களப்பு - வாழைச்சேனை ... வீதியில் இராணுவத்தின ...ந்து நடவடிக்கைகள் தீவி...ப்பட்டுள்ளன. முக்கிய சந்... மேலதிக இராணுவத்தினர் ...ாகக் காவல் கடமைகளில் ...ப்பட்டுள்ளனர்.

...ங்கள் திடீரென மறிக்கப்பட்டு சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள்களில் பயணிப்போர் மீதும் தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

தொடர் தாக்குதல் சம்பவங்களையடுத்து மக்கள் மத்தியிலும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பிரதான நகரங்கள் மற்றும் பொதுச் சந்தைகள் என்பவற்றில் மக்கள் நடமாட்டம் குறைவடைந்து காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் மற்றும் பொலீஸார் மீது இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களையடுத்து விடுமுறையில் செல்லும் படையினரை ஏற்றிச் செல்லும் வாகனத் தொடரணிகளுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது. (க)




## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,செப்.3

நல்லூர்க்கந்தசுவாமி கோயில் தீர்த்த உற்சவத்தை ஒட்டி நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று காலை 9 மணிக்கு இசை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

காலை 9 மணி தொடக்கம் ஆதீனக் கலாமண்டபத்தில் நடைபெறும் இசை நிகழ்வில் வி.சிவஞானசேகரத்தின் திருமுறைக் கச்சேரி, யதுநந்தினி இராமநாதன், அருணந்தி ஆரூரன், கலாசராணி ஸ்ரீஸ்கந்தராசா, மஞ்சுளா விநாசித்தம்பி, குமுதா சோமசுந்தரக்குருக்கள், எஸ்.சிவஞானராசா, எஸ்.வர்ணகுலசிங்கம் ஆகியோரின் இசைக் கச்சேரிகள் ஆகியன இடம்பெறும்.(202)

***

யாழ்ப்பாணம்,செப்.3

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் 25 ஆம் நாளான இன்று பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

வயலின் எம்.விஸ்வமூர்த்தி, மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் எ.செல்வரத்தினம் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்பேற்பர். (202)

***


யாழ்ப்பாணம்,செப்.3

நல்லூர் முருகன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தையொட்டி நல்லூர் மேற்குவீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயமண்டப அரங்கில் கந்தபுராணம் என்னும் பொருளில் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்தசர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்தி வருகின்றார்.

அதில் இன்று மாலை 6 மணிக்கு 'சேவலும் மயிலும் போற்றி' பற்றி உரை நிகழ்த்துவார். (202)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

இருபத்தைந்தாம்நாள் திருவிழா



## முகமும் விளங்குதடி



*கிட்ட நெருங்கையிலே கிளியே!*
*கிடுகிடென்று நடுங்குதடி*
*முட்டாளைப் போலேயவன் - கிளியே!*
*முகமும் விளங்குதடி.*

*- யோகர் சுவாமிகள்.*

## தீவினைகள் தீர்க்கும் திருமுருகன் தீர்த்தம்

எடுப்பு
சூழ்ந்திடு மடியவர் துயரெரிக்கும்; நல்லை
சூழலில் வந்தாலே வினைசெரிக்கும்
(சூழ்ந்திடு)

தொடுப்பு
ஆழ்ந்திடும் அருளோங்கி அகம் குளிரும்; வேலன்
அருகினில் சென்றாலே செகம் மிளிரும்
(சூழ்ந்திடு)

முடிப்பு
தாழ்ந்திடும் தமிழோங்கித் தலைநிமிரும்; இங்கு
தாவிடும் பகைக்கூட்டம் நிலை தவறும்.
நேர்ந்துமே திருத்தீர்த்தம் ஆடிடும் முருகாநின்
திருவடி நிழல்தானே திகழ் செழிக்கும்
(சூழ்ந்திடு)

அனலையூர் சேந்தன்

## வரும் பகையது நீங்க ஆடிடு தீர்த்தமே!

*சித்தர் தம் பாதம் படிந்த நல்லைநகரிலே*
*பக்தர் தம் பாவமெல்லாம் போக்கியே*
*மாசிலா மாந்தர் தம் உள்ள மெல்லாம்*
*நேசமுடன் நிறைந்திருப்பவனே*
*கூறிடும் அடியவர் குறைகளெல்லாம்*
*கூற்றென நீக்கியே அருள் புரிபவனே*
*அருளதை புரிந்திடும் ஆறுமுகமானவனே*
*வரும்பகை யதுநீங்க ஆடிடு தீர்த்தமே.*

எஸ்.பத்மராஜா

## பாலனவன் தீர்த்தமாடுகின்றான்

தேர்தனிலே ஏறிவந்து தீர்த்தோம் குறைகளெனப்
பார்வதியின் பாலனவன் புனிததீர்த்தமதில் ஆடுகின்றான்
நேர்த்திதனை நிறைவுசெய்து நல்லருளே நமக்களிக்கும்
மூர்த்திதனை நாம்தொழுது மிகவுயர்ந்த நிலைபெறுவோம்

நாயன்மார்க்கட்டு ப.மகேந்திரதாசன்.

## பாவம் போக்கும் பார்வை கொடு

*கோடியெழில் சிந்த நீயும் ஊர்வலமாய் வருவாய்! - எம்*
*ஊழ்வினையைக் கொல்லவென்று பூமியிலே சுடர்ந்தாய்!*
*வாடி மனம் விழ்கிறதே! என்ன செய்யப் போறாய்! - நீ*
*வந்துவிடு இல்லையெனில் வாழ்வு ரணமாகும்!*

*நல்லையிலே உன் கருணை எல்லையின்றி ஒடும்! - இசை*
*நாதமதில் உன் பெருமை கீதமென ஆகும்!*
*இல்லை ஒரு துன்பமென நம்பிவிடும் போதும்! - நீ*
*இதழ்க்கடையில் சிரிக்கின்றாய்! என்ன உந்தன் வேதம்..?*

*புயலில் ஒரு படகு என அலைந்துலையும் போது! - நீ*
*புரியாமல் இருப்பாயோ? வடிவேலை விசு!*
*பயநெருப்பைச் சுட்டு உந்தன் நிஜவடிவம் காட்டு! - உன்*
*பார்வையினால் எம்முடைய பாவமதைப் போக்கு!*

-தாட்சாயினி-

# நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி; சீன- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு,செப்.3

நுரைச்சோலையில் நிலக்கரி மின்சக்தி நிலையத்தை விரைவில் செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று சீனாவுக்கும்- இலங்கைக்குமிடையில் கையெழுத்திடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மாளிகை அறிவித்தல் ஒன்று தெரிவிக்கின்றது.

சீனாவின் தேசிய இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் இறக்குமதி - ஏற்றுமதி கூட்டுத்தாபனத் தலைவர் ஸீ பியாஓவுக்கும் இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேக்காவுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது என்று அவ்வறிக்கை கூறுகிறது. ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க அண்மையில் பெய்ஜீங் சென்றிருந்தபோது இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

நிதி, உல்லாசப்பயணம் மற்றும் கலாசாரம் தொடர்பான வேறு ஆறு ஒப்பந்தங்களும் கையெழுத்திடப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதை ஜனாதிபதி குமாரதுங்க, சீன அதிபர் ஹிஜின்டாஓ ஆகியோரும் பார்வையிட்டனர். (ப)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஸ்ரீரமணி அருள்வேல்
அவர்களின் தந்தை

**சுந்தரம் சுப்பிரமணியம்**

அவர்கள் காலமானதையிட்டு எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையடைவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
கல்விசாரா உத்தியோகத்தர்கள்.

(39591)(42-32-15-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 01 - 10 - 1947



மறைவு 05 - 08 - 2005

**திருமதி செல்வநாயகி பொன்னுத்துரை**

எமது அன்புத் தெய்வம் நோயுற்றிருந்தபோது வந்து ஆறுதல் வழங்கியோருக்கும் அவரது இறுதிக்கிரியைகளில் கலந்து துயர் பகிர்ந்தோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எம் துயர நிகழ்வில் பங்குகொண்டு உதவி வழங்கியோருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

எமது இல்லத்தில் இன்று (03-09-2005) சனிக்கிழமை நடைபெறும். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் நாளை (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மதியபோசன உபசரிப்பிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

186, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

செ.பொன்னுத்துரை
(கலாபூஷணம் - ஒகன் மாஸ்ரர்)
கிருஸ்ணகுமார் பிரேமலதா
குடும்பத்தினர்.

(39514)(32-15-11)

## முதலாம் ஆண்டின் நீங்காநினைவுகள்

மண்ணில் 15 - 10 - 1944 (இடைக்காடு)



விண்ணில் 14 - 09 - 2004 (கொழும்பு)

அமரர்

**சிவசுப்பிரமணியம் சின்னத்தங்கச்சி**

(இராசம்)

திதி: ஆவணி மாத அமாவாசை

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
ஓயாது உருண்டோடும்
உங்கள் நினைவுகளில் வாழ்கின்றோம்
அரனடியில் சாந்திக்கு வேண்டுகிறோம்.

உடையார் வளவு,
இடைக்காடு,
அச்சுவேலி.

கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39535)(32-11-15)






அருள் முருகனுக்கு இன்று தீர்த்தோற்சவமாம்!
அவன் அடிபணிந்து அருள் பெற்றிடுவோம்!

**சொலெக்ஸ்**

பல், மூக்குக்கண்ணாடி அகம்

உங்கள் கண்களைப் பரிசோதித்து கவர்ச்சிகரமான பிறேம்களில் கண்ணாடியினைப் பொருத்திப் பெற்றுக் கொள்ளலாம். நவீனரக சண் கிளாஸ்களை மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். சங்குப் பற்களை அழகாகக் கட்டவும் மிதப்புப் பற்களை கிளிப் பொருத்தி இலகு முறையில் சீர் செய்து கொள்ளவும்.

516, ஆஸ்பத்திரி வீதி, (OPD முன்பாக)
யாழ்ப்பாணம்.

கிளை நிறுவனம்: பிரதான வீதி, மூதலாம் குறுக்குத்தெரு, நெல்லியடி.
T.P:0777 286029

(சி-44844)


## தேவை

எம்.இராஜநாயகம் அன்கோ பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்திற்கு கணக்காய்வுப் பயிலுநர்கள் தேவை. ஞாயிற்றுக்கிழமை (04.09.2005) மாலை நேரில் வரவும்.

**140, பலாலி வீதி,**
**(பரமேஸ்வராச்சந்தி)**
பெற்றோல்செற் முன்பாக,
திருநெல்வேலி. T.P.No.: 021 222 2478.

(39538)(42-32-11-15)

## ஆங்கில தின நிகழ்வு ஒத்திவைப்பு

கரவெட்டி,செப்.3

வடமராட்சி கல்வி வலயத்தின் ஆங்கில தினவிழாவை முன்னிட்டு இன்று நடைபெறவிருந்த ஆங்கில பேச்சு மற்றும் எழுத்துப் போட்டிகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் சிலர் வேறு போட்டியில் பங்குபற்றுவதற்காகக் கொழும்பு சென்றுள்ளதாலேயே இங்கு நடைபெறவிருந்த போட்டி பிற்போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (3-70)

## வேலணையில் அபிவிருத்திப் பணிகள்

பன்முகப்படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்திலிருந்து வேலணை பிரதேச சபையினரால் அபிவிருத்திப் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

9 லட்சத்துத்து 75 ஆயிரம் ரூபா செலவில் இந்தப் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்று வேலணை பிரதேச சபையின் செயலாளர் கைலாசபிள்ளை மகேந்திரலிங்கம் தெரிவித்தார்.

மேற்படி நிதியைப் பயன்படுத்தி புங்குடுதீவு, மண்டைதீவுப் பகுதிகளில் தண்ணீர்த் தொட்டிகள் நிறுவப்படுகின்றன. அதே போல் பிரதேச சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கும், சிறுவர் பாடசாலைகளின் உபகரணக் கொள்வனவுக்கும் நிதிபயன்படுத்தப்படும்- என்று செயலாளர் மேலும் தெரிவித்தார். (எ)

## பெருந்திருவிழாவை ஒட்டி பஸ்சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம்,செப்.3

நல்லூர் கந்தசுவாமி ஆலய தீர்த்த மற்றும் பூங்காவனத் திருவிழாக்களை முன்னிட்டு பக்தர்களின் வசதி கருதி யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து இரவு 9 மணிவரை பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன. இத்தகவலை வடபிராந்திய போக்குவரத்துச் சபைபொது முகாமையாளர் க.கணேசபிள்ளை தெரிவித்தார்.

காங்கேசன்துறை வீதி, மானிப்பாய் வீதி என்பனவற்றினூடாக பயணிக்கின்ற பஸ்கள் இந்த நாள்களில் கந்தர்மடச் சந்தியூடாகவே செல்லும் என்று தெரிவிக்கப்பட்டது. (9)

## வாழைச்சேனையில் தம்பதியர் விடுவிப்பு

ஏறாவூர், செப்.3

வாழைச்சேனை - யூனியன் கொலனிப் பிரதேசத்தில் வைத்து கடந்த புதன்கிழமை பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்ட தம்பதியர் விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரியின் பிரதி அதிபரான பிள்ளையான் நல்லரத்தினம் (வயது - 43) அவரது மனைவியான ஆசிரியை ஜோய் பிரேமினி நல்லரத்தினம் (வயது 38) ஆகியோரே பொலீஸாரினால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

யூனியன் கொலனிப் பிரதேசத்தில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது இனம்தெரியாதநபர்கள் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலையடுத்து இப்பிரதேசத்தைச் சுற்றி வளைத்த பொலீஸார் சந்தேகத்தின்பேரில் இந்த இருவரையும் கைது செய்திருந்தனர்.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி, வாழைச்சேனை உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் மற்றும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் தொடர்புகொண்டதை அடுத்து கைது செய்யப்பட்ட இருவரும் பொலீஸாரினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ந-157)

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 - 06 - 1933



மறைவு 20 - 08 - 1990

அமரர்

**வைத்திலிங்கம் நடராசா**

(முன்னாள் பொறுப்பதிகாரி, வலி.கிழக்குப் பிரதேசசபை அச்சுவேலி)

திதி 08.09.2005

பாசமுள்ள அப்பாவே! ஆண்டுகள் பதினைந்து ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள், பாசங்கள் எங்களை விட்டு என்றும் அகலாது. வருடம் தவறாமல் கந்தன் தீர்த்தத்தில் உங்கள் ஆத்மா சாந்தியடைய அஞ்சலி செலுத்தும்

துஷா இல்லம்,
கற்பக்குணை,
உடுவில்,
சுன்னாகம்

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(39501)(32-15-11)

## சக்தி TV, சக்தி FM இன் 7வது பிறந்தநாள் கொண்டாட்டம் 2005

யாழ். மாவட்டத்திற்கான மாபெரும்
சைக்கிள் ஓட்டப்போட்டி

### போட்டி நிபந்தனைகள்:

- ✓ போட்டியானது ஆண்/பெண் இரு பாலாருக்குமானதாகும்.
- ✓ மேற்படி போட்டிகளில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீர/வீராங்கனைகள் மாத்திரமே பங்குபற்ற முடியும்.
- ✓ 15 வயதிற்கு மேற்பட்டோர் மாத்திரமே கலந்துகொள்ளமுடியும்.
- ✓ இவ்விண்ணப்பப்படிவத்துடன் கட்டாயமாக உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை நகல் பிரதி ஒன்றையும் இணைத்து 05.09.2005 க்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வாறு பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**சக்தி TV, சக்தி FM சைக்கிள் ஓட்டப்போ**
**C/o உதயன்**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

### சக்தி TV விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :..........
2. விலாசம் :..........
3. பிறந்த திகதி :..........
4. தொலைபேசி இல :..........
5. தேசிய அ.அட்டை இல :..........
6. பால் :..........

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையவும், நடுவர்களின் தீர்ப்புகளிற்கும் ஏற்பாட்டாளர்களின் நிபந்தனைகளுக்கு அமையவும் இப் போட்டியில் கலந்துகொள்கிறேன் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.......... ..........
திகதி கையொப்பம்

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/உரும்பிராய் சந்திரோதயவித்தியாலயம்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசுப்பிரமணியம் (ஆனந்தன்) 30.08.2005 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - புகவீகவல்லி (CANADA) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் அமரர் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) - செல்வநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் மங்களேஸ்வரி (ஆசிரியை உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம் ) அவர்களின் அன்புக் கணவரும் தர்சினி (AUSTRALIA), மாதினி (2004 உயர்தர மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகேஸ்வரன்(நாவலப்பிட்டி- N.K.R), செல்வராஜா (CANADA), ஜெயராணி (CANADA), புஸ்பராணி (HOLLAND), பாலகிருஷ்ணன் (CANADA), மோகனராணி (CANADA), ஜெயக்குமார் (CANADA) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆலாலசுந்தரம் (CANADA), இராசதுரை (CANADA), காலஞ்சென்ற செல்வரஞ்சினி, நோமா (நீர்கொழும்பு), தேவிகா (CANADA), நந்தினி(CANADA), ஆகியோரின் மைத்துனரும் டில்மினி, டினேஸ், டில்சாணி (நாவலப்பிட்டி), பிரதீப் (நீர்கொழும்பு), லக்ஷாணி (நாவலப்பிட்டி), லக்ஷனன், லவானி (CANADA) ஆகியோரின் பெரிய தந்தையும் ஜெயவுரி, ஜெயசுதன் (CANADA), அனோஜா, ஜெஜீனா, ஜெசிந்தா, (HOLLAND), சஜித்தா, ரஜீவ் (CANADA) ஆகியோரின் அன்பு மாம னாரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இன்று (03.09.2005) சனிக்கிழமை பி.ப. 2மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி,
இணுவில்.

தகவல்:
மனைவி.

(39549)(38-18-13)

## திருமதி சின்னத்துரை சிவபாய்கியம்



(வாத்தியார் அம்மா)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது நியூஸிலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை சிவபாய்கியம் அவர்கள் 01.09.2005 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை ஆசிரியர் அவர்களது அன்பு மனைவியும் இராமலிங்கம் (பொறியியலாளர் - U.K.), பூபாலசிங்கம் (பொறியியலாளர் U.K.), வள்ளிநாயகி (பல்வைத்தியர் நியூஸிலாந்து), நித்தியானந்தன் (வங்கியாளர்,கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வனஜா (U.K.), திரவியம் (U.K.), ரகுபதி (டாக்டர் - நியூஸிலாந்து), கலாஜோதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தம்பிராசா, இரத்தினசிங்கம், இராசமணி மற்றும் நடராசா (முன்னாள் வங்கியாளர், இலங்கை வங்கி) ஆகியோரின் சகோதரியும் தில்லைக் கண்ணனின் (கண்ணா) அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நியூஸிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார் லேன்,
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.
T.P.: 6056769

தகவல்:
த.இ.நடராசா (முன்னாள் வங்கியாளர், இலங்கை வங்கி).

(39569)(38-18-13)

## சரஸ்வதி கணபதிப்பிள்ளை

கரவெட்டி மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த சரஸ்வதி கணபதிப்பிள்ளை நேற்று (02.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் கணபதிப்பிள்ளை (எக்கட்டியான்)யின் அன்பு மனைவியும் ஜெயந்தினி, கமலாதேவி காலஞ்சென்ற ஜெயாதேவி, நிர்மலாதேவி, விக்னராசா, அம்பிகாதேவி ஆயோரின் பாசமிகு தாயாரும் யோகராசா (கனடா), இராஜமோகன், பிரேமானந்தராசா ஆகியோரின் மாமியாரும் விவேகானந்தன், தனவேந்தன், கௌசல்யா, தீபாகரன், தமிழ்வாணி, சுரேன், பாரத், கிஷான், கிஷாத், கேமிசன், சுகன்யா, நிதர்ஷன், யதுர்சன், யதுர்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி,பொன்னம்மா, கனகசபாபதி மற்றும் கணபதிப்பிள்ளை, (நீலப்பிள்ளை), வள்ளிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற பொன்னம்மா, சின்னத்தம்பி, நல்லராசா மற்றும் அன்னலட்சுமி, நவராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2005) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேனாவளவு,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல்:
க.விக்னராசா (மகன்).

(சி-45007)(38-18-13)

## Dr. செல்லையா வேலாயுதபிள்ளை

தெல்லிப்பழை, தையிட்டிப்புலத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வதிவிடமாகவும் தற்பொழுது புத்தளத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்ற Dr. வேலாயுதபிள்ளை நேற்றுமுன்தினம் (01.09.2005) வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் முன்னாள் பதிவாளர் சின்னையா - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் செந்திருவின் அருமைக் கணவரும் வேல்மகிபன் (கனடா), வேல்செல்வி (லண்டன்), வேல்சுபதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வாகினி (கனடா), ஆனந்தகுமாரசாமி (லண்டன்), பிரியகுமாரன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் கிரிசாந், மாதுரி, மதூரா ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். அவரின் கண்ணீர் அஞ்சலி நிகழ்வு நாளை (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பதிவாளர் வளவில், சுழிபுரம் மேற்கில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பதிவாளர் வளவு,
சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

தகவல்:
சி. பிரகாஷ்(மைத்துனர்).
0044-208-2008269,
0044-7940 399456

(சி-45006)(38-18-13)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் நடித்த
அந்நியன் (ரீல்ஸ்)
(டொல்பி ஒலியமைப்பு)
காட்சிகள்:
11.00, 3.00, 7.00 (பு.நே.).

நாதன்ஸ் சினிமா
சத்தியராஜ், நமிதா, வடிவேலுவின் நகைச்சுவைச் சித்திரம்
இங்கிலீஸ்காரன்
கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)
(சி-43363)

மனோகரா யாழ்ப்பாணம்
ஜெயம் ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த
தாஸ்
காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30, 6.30, 9.30,
அடுத்த வெளியீடு: சிம்பு, கோபிகா நடித்த
தொட்டி ஜெயா
(சி-44110)

S.L.A.S. போட்டிப்பரீட்சை வகுப்புகள்
மாதிரி வினாப்பத்திர வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
* பொது விவேகம் * பொது அறிவு
* கட்டுரையும் சுருக்கமும்
ஞாயிறு 8-11 (04.09.2005)
D.M.I யாழ்நகரில், (39565)
ஒவ்வொரு ஞாயிறும் நடைபெறும்

WANTED
OLD PARK RESTAUARNT (PVT) Ltd.
No: 40, Kandy Road,
Chundikuli, Jaffna.
Receptionist Cum Accounting Assistant (Female)
* a matured lady below 40 years, knoWledg able in Accounting and reception able to handle telephone in English. (Day time)
* a Gent with similar abilities to handle same (Night time)
* Able to Cook Estern Western and Chinese Stewerd With Experince
Salary Negotiable Please Callover with References. (39498)

## அஞ்சலி நிகழ்வு

வடமராட்சி,செப்.3

பிரபல எழுத்தாளரும் இலக்கியப் படைப்பாளியுமான புலோலியூர் டாக்டர். க.சதாசிவத்தின் முதலாம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்.செயலக தலைமைப்பீட உதவி அரச அதிபர் பி.வீரபத்திரபிள்ளை தலைமையில் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மௌன அஞ்சலியைத் தொடர்ந்து நினைவுச்சுடரை இளைப்பாறிய அதிபர் சி.தர்மலிங்கம் ஏற்றுவார். நினைவுரைகளை பிரபல நாவலாசிரியர் கலாபூசணம் தெணியான், டாக்டர் எம்.கே. முருகானந்தம் எழுத்தாளர்களான புலோலியூர் க.தம்பையா, கே.கந்தசாமி மற்றும் ஆ.கந்தையா, வே.நந்தகுமார் ஆகியோர் நிகழ்த் துவர்.

(எ-173)

ராஜா யாழ்ப்பாணம்
சுரேஸ்கோபி நடித்த
பத்ரம்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30 (பு.நே.)
(சி-43380)

## அக்கடமி ஓவ் ஓரியன்டல் மார்ஷல் ஆட்ஸ் கராத்தே கழகம்

## இதய அஞ்சலிகள்



### எஸ்.ஜோண்சன் பிறேமானந்

எமது கழக நீண்டகால உறுப்பினரும் எமது கழக கராத்தே ஆசிரியருமாகிய ஜோண்சன் அவர்கள் 26.08.2005 வெள்ளிக்கிழமை பிரான்ஸ் நகரில் அகால மரணம் அடைந்த செய்தியை அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

இவரின் இழப்பினால் மிகுந்த வேதனை அடைந்திருக்கும் மனைவி, பிள்ளை, உற்றார், உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

9/3, மருதடி வீதி,
யாழ்.

A.OMA
பிரதம ஆசிரியர்களும், மாணவர்களும்,
பழையமாணவர்களும்.

(39570)(38-18-13)

# மரண அறிவித்தல்

## சின்னையா தர்மலிங்கம்

(ஆசாரியார்)



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த சின்னையா தர்மலிங்கம் அவர்கள் நேற்று (02.09.2005) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தெய்வாணைப்பிள்ளையின் அன்புக் கணவரும் சேவாச்செல்வி, சிற்சபோசன் (நோர்வே), ரவீந்திரன் (நோர்வே), விஜயகுமாரி (சுவிஸ்), ஸ்ரீரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் சத்தியபாமா, சாந்தி, யோகதாஸ், ஆனந்தசோதி ஆகியோரின் மாமனும் சாரங்கன், சாருசன், ரகுஜன், அட்சயன், வினிதா, அபிரா, ஆர்த்தி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.09.2005) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசகேசரி பிள்ளையார் கோயிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்:
ரவிந்திரன் (மகன்).

(39571)(38-18-13)

# மரண அறிவித்தல்

## சுந்தரம் சுப்பிரமணியம் (டடா)

(இளைப்பாறிய பிரதம லிகிதர் யாழ்.போதனா வைத்தியசாலை)



*ஏழாலையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் சுப்பிரமணியம் அவர்கள் 31.08.2005 புதன்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், ஸ்ரீகுமார் (கனடா), ஸ்ரீரஜனி (கனடா), ஸ்ரீராகினி (ஜேர்மனி), ஸ்ரீரமணி (ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீரஞ்சன் (கனடா), ஸ்ரீரோகினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீரவிசங்கர் (கனடா), ஸ்ரீரமேஷ் (கனடா), ஸ்ரீசுரேஸ் (கனடா), ஸ்ரீருபினி (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஞானசக்தி (கனடா), சிவமூர்த்தி (கனடா), ஸ்ரீரங்கநாதன் (ஜேர்மனி), அருள்வேல் (தலைவர், வணிகத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்), மலர்ச்செல்வி (கனடா), இராஜேந்திரம் (ஆஸ்திரேலியா), ஜெயபாலினி (கனடா), ரஜனி (கனடா), கலைவாணி (கனடா), ரத்னா கரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌதமி, அஸ்வத், அஸ்விணி, சுகந்தன், சந்தோஷ் காலஞ்சென்ற நிக்கோள், அருச் சுணா, பிருந்தா, ஸ்ரீராமன், மயூரிகா, துஷியந்தா, யதுப்பிரியன், சரண்யா, தனுஷன், பிரணவன், அர்விண், கிரிசோத் கௌதம், சுஜந், அஸ்வின், சுரேஷ், சுனிதா, அஞ்சலி, ராகவி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நாகலிங்கம், காலஞ்சென்ற திலகவதி, முத்துக்குமாரு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.*

*இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

*கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.*

தகவல்:
சு.ஸ்ரீறமணி (மகள்),
க.க. அருள்வேல் (மருமகன்).

(39568)(38-18-13)

## மலையக ஆசிரியர் நியமன சர்ச்சை தீர்ந்தது:

# 3,200 இடங்களில் 1,600இற்கு மட்டும் உடன் நியமனம் வழங்க இணக்கம்

கொழும்பு, செப். 3

பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிப்பது தொடர்பாக முஸ்லிம் தரப்புக்கும் கல்வி அமைச்சுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. ஏற்கனவே கோரப்பட்ட வர்த்தமானியின் அடிப்படையில், பரீட்சை எழுதியவர்களில் இருந்து ஆயிரத்து 600 பேருக்கு நியமனம் வழங்க இரு தரப்பினரும் இணக்கத்துக்கு வந்துள்ளனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஏற்றுக்கொண்டது.

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் 3 ஆயிரத்து 172 வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு தோட்ட இளைஞர், யுவதிகளிடம் இருந்து கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் மலையகத்தில் நிரந்தரமாக வசிக்கும் இந்து, கிறிஸ்தவ மதங்களைச் சேர்ந்த, உயர் தரத்தில் சித்தியடைந்தவர்களே விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனால், மலையகத்தை நிரந்தர வதிவிடமாகக்கொண்ட முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவித்து முஸ்லிம்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அவை அனைத்தும் ஒரே மாதிரியானவை என்பதனால் ஒன்றாகவே நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுகின்றன. இந்த வழக்கு நேற்று பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் குழு முன்பாக விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அப்போது இந்த விடயத்தில் இரு தரப்பினரையும் இணக்கம் ஒன்றுக்கு வரும்படி பிரதம நீதியரசர் கேட்டுக்கொண்டார்.

இதனடிப்படையில், கல்வி அமைச்சின் செயலாளர் சார்பில் இணக்கப்பாட்டுக்கான திட்டம் ஒன்று முன்வைக்கப்பட்டது.

ஏற்கனவே நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் ஆயிரத்து 600 பேரை தோட்டப் பாடசாலைகளுக்கு நியமிப்பது என்றும் -

ஏற்கனவே தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த நியமனத்தை வழங்குவது என்றும் -

அவர்கள் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பாடசாலையிலேயே அவர்களுக்கு நியமனம் வழங்குவது (அவர்கள் அப்பாடசாலையிலேயே கல்வி பயின்றும் இருக்கவேண்டும்) என்றும் -

ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு சிறந்த செயற்றிட்டம் ஒன்றை கல்வி அமைச்சு தயாரித்துச் சமர்ப்பிக்கும் என்றும் -

மலையகத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களை கணக்கிட்டு அவற்றை நிரப்புவதற்கான செயற்றிட்டத்தையும் அதில் உள்ளடக்குவது என்றும்-

ஒரு இணக்கத்துக்கான திட்டத்தை கல்வி அமைச்சின் சார்பில் அதன் சட்டத்தரணி நீதிமன்றத்தில் முன்வைத்தார்.

அந்தத் திட்டத்திற்கு மனுதாரர்களும் இடையீட்டு மனுதாரர்களான இ.தொ.காவினரும் இணக்கம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து விசாரணைகள் எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. அன்றைய தினம் இந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேசமயம், இனிமேல் அரசு சார்பில் வெளியிடப்படும் அரச நியமனங்களுக்கான வர்த்தமானி அறிவித்தல்களில் சமய அடிப்படையிலான தெரிவுஇடம்பெற இடமளிக்கப்படமாட்டாது என்றும் நீதிமன்றத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சார்பில் உறுதி தெரிவிக்கப்பட்டது.

(எ-க)

---

## சூறாவளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்திய இந்தச் சூறாவளியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக இலங்கை முன்வந்ததை மிகவும் வரவேற்பதாக இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க வெளிவிவகாரப் பொறுப்பாளர் ஜேம்ஸ். எவ்.என் வைஸ்ட்ஸ் தெரிவித்திருக்கிறார்.

பாதிக்கப்பட்ட அமெரிக்கர்களுக்கு உதவ இலங்கை கொண்ட அர்ப்பணிப்பு, இரு நாடுகளுக்கிடையேயான சிநேகபூர்வத்தின் ஆழத்தையே எடுத்துக்காட்டுவதாக அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

(எ- )

---

## நல்லூர் கந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 8.50 மணியளவில் ஆறுமுகப் பெருமான் பச்சை சாத்தி தேரில் இருந்து அவரோகணித்தார்.

ஆலயச் சூழலில் பொலீஸ் பாதுகாப்புப் போடாத நிலையிலும் வீதி ஒழுங்கு மற்றும் இதரவசதிகள் என்பன தொண்டு அமைப்புகளால் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டன. எனினும், ஆலயத்தின் உள்ளேயும் வெளியேயும் சன நெரிசலை அதிகமாகக் காணக்கூடியதாக இருந்து.

பக்தர்களின் வசதி கருதி வட பிராந்திய போக்குவரத்துச் சபையினரும் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினரும் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

(எ-12-13-15-111-173-86)

---

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் வியாழக்கிழமை அக்கட்சியுடன் பேச்சு நடத்தியுள்ளனர்.

நாட்டின் இறைமையைப் பாதுகாத்தல், பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துதல், சிங்கள இனத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய கொள்கைகளை முதன்மைப்படுத்தி ஜானகப் பெரேராவை தேர்தலில் நிறுத்த இந்த அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன.

நாட்டின் இறைமையைப் பாதுகாப்பது உட்பட ஹெல உறுமயவினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளை சுதந்திரக் கட்சி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவோ ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவோ இன்னும் ஏற்றுக்கொள்ளாத நிலையில் ஜானக பெரேராவுக்கு ஆதரவளிப்பது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் கவனம் திரும்பியுள்ளது என்று கூறப்படுகின்றது.

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தமிழ் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் பலவற்றில் குற்றஞ்சாட்டப்பட்டவர். யாழ். மாவட்டத்தில் 1996/1997 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் காணாமற்போன சமயம் அங்கு இராணுவத்தின் கட்டளை அதிகாரியாக இருந்தவர் அவர். செம்மணிப் புதை குழி வழக்கில் அவர் மீதும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அவர் ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராக இலங்கை அரசினால் நியமிக்கப்பட்ட போது மனித உரிமைகள் அமைப்புக்களும் தமிழர் ஆதரவு அமைப்புக்களும் அதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(எ-க)

---

## ஐ.நா.அமைதிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குமாரதுங்க கடும் அதிருப்தி கொண்டிருக்கிறார் என்றும்-

விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படும் யுத்தநிறுத்த மீறல்கள் தொடர்பில் உரிய பதில் நடவடிக்கைகளை இந்தக் கண்காணிப்புக் குழு எடுக்கவில்லை - அல்லது எடுக்க அதனால் முடியவில்லை - என்றும்

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுகின்றார் எனக் கூறப்படுகின்றது.

இதனால், கண்காணிப்புக் குழுவின் இடத்துக்கு ஐ.நா. அமைதிப்படையைக் கொண்டுவந்து நிறுத்தச்செய்து, அதன் மூலம் புலிகளின் கொட்டத்தை அடக்கி வைக்கமுடியும் என்றும், பதவி விலகும் நேரத்தில் சிங்கள மக்கள் மத்தியில் தமது கீர்த்தியை நிலைநிறுத்தச் செய்யமுடியும் என்றும் அவர் கருதுகிறார் எனவும்கூறப்படுகின்றது. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நோர்வேயின் அனுசரணைப் பணி குறித்தும் ஜனாதிபதி சந்திரிகா சினம் கொண்டிருக்கிறார் எனத் தெரிகின்றது. அதனை அவரது சகோதரரும், புதிய வெளிவிவகார அமைச்சருமான அநுரா பண்டாரநாயக்கா அப்பட்டமாக வெளிப்படுத்தியும் வருகிறார்.

இலங்கை விவகாரத்தில் ஐ.நா. தரப்பை நுழைப்பதன் மூலம் நோர்வேயின் எடுப்பையும் கட்டுப்படுத்த முடியும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுண்டதன் பின்னணியில், ஐ.நா. அமைதிப் படையை இங்கு நுழைவிப்பதற்கு அதிக சாத்தியம் ஏற்பட்டிருப்பதாகக் கருதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அது குறித்து இவ்வார முற்பகுதியில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானுடன் தொலைபேசியூடாக முக்கிய பேச்சுகளை நடத்தியிருக்கிறார்.

அதேபோல் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பிரெஞ்சுப் பிரதமர் ஜக் ஷிராக், இத்தாலிப் பிரதமர் சிசிலியோ பலஸ்கோனி ஆகியோருடனும் தொலைபேசியூடாகக் கலந்துரையாடியிருக்கும் ஜனாதிபதி குமாரதுங்க, ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான விவகாரத்தில் அவர்களின் ஆதரவையும் கோரியிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவென எதிர்வரும் வார இறுதியில் நியூயோர்க் செல்லவுள்ள ஜனாதிபதி, அங்கு மேற்படி விடயம் குறித்து ஐக்கிய நாடுகள்சபை செயலாளர் நாயகத்துடன் தனிப்பட்ட பேச்சுகளை நடத்தவுள்ளார்.

இதேவேளை, முக்கியமான விஜயமொன்றை மேற்கொண்டு கொழும்பு வந்துள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்துடன் சிரேஷ்ட ஆலோசகரான பிரேஹ்மி மேற்படி விடயம் குறித்தே இலங்கை அரசியல் தலைவர்களுடன் முக்கியமாக ஆராயவுள்ளார் எனக் கூறப்படுகிறது.

(எ- )

---

## அடையாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக அடையாளம் காட்டக்கூடிய சூழ்நிலை இருப்பதால் தன்னை அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்துவதை சந்தேகநபரான கோபி ஆட்சேபித்தார்.

அவரது ஆட்சேபத்தை ஏற்றுக்கொண்ட நீதிவான், கை இல்லாத வேறுபலரையும் அவருடன் அணி வகுப்பிற்கு உட்படுத்துமாறு பொலீஸாரைப் பணித்தார்.

இதன்படி அடையாள அணிவகுப்பு எதிர் வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(எ-க)

---

## சு.க.தனித்தே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகள் பாதிக்கப்படும் என்பதாலும் -

இனவாத ரீதியான பிரசாரங்களையும், கொள்கைகளையும் முன்னெடுக்க வேண்டி வரும் என்பதாலும்- இவ்வாறான எதிர்ப்பை வெளியிடுவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஜே.வி.பி.யுடன் தேர்தல்உடன்பாடு ஒன்றுக்குப் பிரதமர் தயாரகிவிட்டார் என்று செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் இவர்களின் எதிர்ப்புக்கிளம்பியுள்ளது.

அவர்கள் தமது எதிர்ப்பை வெளியிடும் பட்சத்தில் ஜனாதிபதித் தேர்தல் விடயத்தினால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் சர்ச்சை - பிளவு - ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (எ-க)

---

## அடுத்த மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானி எதிர்வரும் ஒக்டோபரில் பிரசுரமாகும் எனத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவை விசேட ஆணையாளர்களின் பரிபாலனத்தின் கீழேயே கடந்த பல வருடங்களாக இயங்கிவருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்குக்கு வெளியே உள்ள 16 மாகாணசபைகள், 37 நகரசபைகள், 309 பிரதேசசபைகளுக்கே அடுத்த மார்ச்சில் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன.

---

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரது சடலம் வெட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை மீட்கப்பட்டது. சிறிமாபுரப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர் இரவுவேளையில் துவரங்காட்டுப் பகுதிக்கு பாண் ஏற்றிவர மோட்டார் சைக்கிளில் சென்றார் எனவும் - அந்தச் சந்தர்ப்பத்தில் மேற்படி சம்பவம் நடந்துள்ளதாகவும் - பொலீஸார் மேலும் கூறினார்.

அப்பகுதியில் இளைஞனின் சடலம் ஒன்று கிடப்பதாக பொதுமக்கள் தெரிவித்ததை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலீஸார், சடலத்தை திருமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றனர்.

இந்தக்கொலையை அடுத்து பிற்பகல் அளவில் சிறிமாபுரப் பகுதி பதற்றமாகக் காணப்பட்டது. பொலீஸாரும் இராணுவத்தினரும் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த மாதம் வழக்கு ஒன்றின் அழைப்பாணையைக் கையளிக்கச் சென்ற பொலீஸாரை தாக்கிய சம்பவத்துடன் குறித்த நபர் தொடர்புபட்டிருந்தார் என்று கூறப்படுகிறது. அவர் தமிழ்ப்பெண் ஒரு வரையே திருமணம் செய்திருந்தார். (எ-க)

---

## எழுதுமட்டுவாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணில் இச்சம்பவம் இடம்பெற்றது. அங்கு கடமையில் இருந்த எழுதுமட்டுவாழ், ஓட்டுவெளி இராணுவ முகாமைச் சேர்ந்த பி.சம்பிக்க றொசான் குணரட்ன (வயது 24)என்ற சிப்பாயே சம்பவத்தில் கொல்லப்பட்டவராவார். இவர் இரத்தினபுரி மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

அவருடன் காவலரணில் இருந்த சக சிப்பாயின் துப்பாக்கி வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று பொலீஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த துப்பாக்கியை வைத்திருந்த சந்தேகநபரான ஆர்.ரி.சுனிந்த ஜெயலத் கொடிகாமம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 8ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

உயிரிழந்த இராணுவச் சிப்பாயின் சடலத்தை கொழும்புக்கு அனுப்பி பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் அதனை உறவினர்களிடம் கையளிக்கும்படியும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-117)


**வாழ்த்துகின்றோம்**

கணனி உலகில் தரமான சேவையை வழங்கி வரும்

**Marsha Systems** இன்று (03.09.2005)

சனிக்கிழமை தனது முதலாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. இந்த நிறுவனம் தனது சேவையை மென்மேலும் சிறப்புறத் தொடரவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

(39564)(38-13-18) *வாடிக்கையாளர்.*

**INTERNATIONAL SCHOOL - MANIPAY** 'a school with a difference'

GRAND OPENING JAN 2006, MONTESSORI ON WARDS; PARENTS PLEASE APPLY TO A VOID DISSAPPOINTMENT

Vacancies - Graduates Trained & A/L Qualified Teachers. Initial Training for Three (03) Months at Manipay.

சர்வதேச பாடசாலை - மானிப்பாய் 'வடக்கின் முன்மாதிரியான பாடசாலை' வடக்கில் பிரமாண்டமான ஆரம்பவிழா, முன் பள்ளியில் இருந்து உயர்வகுப்பு வரையானது: வரையறுக்கப்பட்ட அனுமதிகள் மட்டுமே உள்ளதால்; பெற்றோர்கள் தாமதிக்காது விண்ணப்பித்து ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ளவும்.

மாணவர்களுக்கான சிறப்பு வசதிகள் :- 01.தங்குமிடம் (மாணவர் விடுதி) 02. போக்குவரத்து இலவசம்

01. யாழ்ப்பாணம் - குருநகர் - இராசாவின் தோட்டம் - மானிப்பாய் 02. சுழிபுரம் - சித்தங்கேணி - மானிப்பாய் 03. உரும்பிராய் - கோண்டாவில் - கொக்குவில் - மானிப்பாய்

மேதர் வீதி, மானிப்பாய். (39553)(38-13-18) பணிப்பாளர், கியுமெடிக்கா, ஸ்ரீலங்கா.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.09.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.